சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

---

# சைவத்திருநெறிப்
# பன்னிரு-திருமுறைத் திரட்டு.

இஃது

யாழ்ப்பாணத்து நல்லூர்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்**

மருகரும், மாணாக்கரும், வித்துவசிரோமணியுமாகிய

**ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்**

மாணாக்கரும்,

யாழ்ப்பாணம் இந்துகாலீஜ்

தலைமைத் தமிழ்ப் பண்டிதருமாகிய

**ஸ்ரீ. ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளையவர்கள்**

சைவவித்தியாசாலைகளினுபயோகத்திற்காகத்திரட்டியது.

---

யாழ்ப்பாணம்

சைவப்பிரகாச யந்திரசாலை.

---

விரோதிகிருது௵ தை௴.

1912.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சைவத்திருநெறிப் பன்னிரு திருமுறைத் திரட்டு.

## க-ம் வகுப்பு.

## தேவாரம்.

---

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

க-ம் திருமுறை. திருப்பிரமபுரம். பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௧)

க-ம் திரு. திருச்சிவபுரம். பண் - வியாழக்குறிஞ்சி.

இன்குரலிசைகெழும்யாழ்முரலத்
தன்கரமருவியசதுரர்நகர்
பொன்கரைபொருபழங்காவிரியின்
தென்கரைமருவியசிவபுரமே. (௨)

உ-ம் திரு. திருச்சிக்கல். பண் - இந்தளம்.

வானுலாவுமதிவந்துலாவும்மதின்மாளிகை
தேனுலாவுமலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனில்வேளைவிழித்திட்டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகநினைவார்வினையாயினநையுமே. (௩)

௩-ம் திரு [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

## திருநாவுக்கரசுநாயனார்

௪-ம் திரு திருவதிகைவீரட்டானம். பண் - கொல்லி

கூற்றாயினவாறு விலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறியேன்
ஏற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதுடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௫)

௪-ம் திரு திருவங்கமாலை. பண் - சாதாரி.

தலையேநீவணங்காய், தலை-மாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத்,தலையேநீவணங்காய். (௬)

கண்காள்காண்மின்களோ,கடல்-நஞ்சுண்டகண்டன்றன்னை
எண்டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக்,கண்காள்காண்மின்களோ.

செவிகாள்கேண்மின்களோ,சிவன்-எம்மிறைசெம்பவள
எரிபோல்மேனிப்பிரான்றிறமெப்போதுஞ்,செவிகாள்கேண்மின்களோ.

மூக்கேநீமுரலாய்,முது - காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை,மூக்கேநீமுரலாய். (௯)

வாயேவாழ்த்துகண்டாய்,மத - யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னை,வாயேவாழ்த்துகண்டாய் ()

நெஞ்சேநீநினையாய்,நிமிர்-புன்சடைநின்மலனை
மஞ்சாடும்மலைமங்கைமணாளனை,நெஞ்சேநீநினையாய். (௧௧)

கைகாள்கூப்பித்தொழீர்,கடி-மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரையார்த்தபரமனைக்,கைகாள்கூப்பித்தொழீர். (௧௨)

ஆக்கையாற்பயனென்,அரன்-கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ் ஆக்கையாற்பயனென். ()

கால்களாற்பயனென்,கறைக்-கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக்,கால்களாற்பயனென். (௧௪)

உற்றாராருளரோ, உயிர்-கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லாலநமக், குற்றாராருளரோ (௧௫)

இறுமாந்திருப்பன்கொலோ, ஈசன்-பல்கணத்தெண்ணப்பட்டுச் சிறு
மானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்றங், கிறுமாந்திருப்பன்கொலோ

தேடிக்கண்டுகொண்டேன், திரு-மாலொடுநான்முகனுந் [டேன்
தேடித்தேடொணாத்தேவனையென்னுள்ளே, தேடிக்கண்டுகொண்

### ௪-ம் திரு. திருவாவடுதுறை நேரிசை

மாயிருஞாலமெல்லாம்மலரடிவணங்கும்போலும்
பாயிருங்கங்கையாளைப்படர்சடைவைப்பர்போலும்
காயிரும்பொழில்கள்சூழ்ந்தகழுமலவூரர்க்கம்பொன்
ஆயிரங்கொடுப்பர்போலுமாவடுதுறையனாரே. (௧௮)

### ௪-ம் திரு. திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
என்றானிமையவர்க்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே (௧௯)

### ௫-ம் திரு. கோயில்திருக்குறுந்தொகை

அன்னம்பாலிக்குந்தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்குமேலுமிப்பூமிசை
என்னம்பாலிக்குமாறுகண்டின்புற
இன்னம்பாலிக்குமோவிப்பிறவியே. (௨௰)

### ௬-ந் திரு. கோயில் பெரியதிருத்தாண்டகம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானை
அருமறையினகத்தானையணுவையார்க்குந்
தெரியாததத்துவனைத்தேனைப்பாலைத்
திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றைக்
கரியானைநான்முகனைக்கனலைக்காற்றைக்
கனைகடலைக்குலவரையைக்கலந்துநின்ற
பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௨௧)

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக்
காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதினானை
அற்றார்க்குமலந்தார்க்குமருள்செய்வானை
ஆரூரும்புகுவானையறிந்தோமன்றே
மற்றொருவர்றன்னொப்பாரில்லாதானை
வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தப்
பெற்றானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௨௨)

### ௬-ந் திரு திருவாவடுதுறை திருத்தாண்டகம்.

திருவேயென்செல்வமேதேனேவானோர்
செழுஞ்சுடரேசெழுஞ்சுடர்நற்சோதிமிக்க
உருவேயென்னுறவேயென்னூனேயூனின்
உள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற
கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணிற்
கருமணியேமணியாடுபாவாய்காவாய்
அருவாயவல்வினைநோயடையாவண்ணம்
ஆவடுதண்டுறையுறையுமமரரேறே. (௨௩)

## சுந்தரமூர்த்திநாயனார்.

### ௭-ந் திரு. திருவெண்ணெய்நல்லூர் பண் - இந்தளம்.

பித்தாபிறைசூடீபெருமானேயருளாளா
எத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை[டுறையுள்
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௨௪)

### ௮-ந் திரு திருத்தொண்டத்தொகை பண்-கொல்லிக்கௌவாணம்.

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியேன்
இல்லையேயென்னாதவியற்பகைக்குமடியேன்
இளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டர்க்கடியேன்
அல்லிமென்முல்லையந்தாரமர்நீதிக்கடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௫)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

### திருவாசகம்

— —

அ ந திரு திருச்சதகம்.

மெய்தானரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான்றலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசய போற்றியென்னுங்
கைதானெகிழவிடே னுடையாயென்னைக் கண்டுகொள்ளே. (உக)

### திருக்கோவையார்.

அ ந திரு

திருவளர் தாமரை சீர்வளர் காவிகளீசர்தில்லைக்
குருவளர்பூங்குமிழ் கோங்குபைங் காந்தள் கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையொர்வல்லியி னொல்கி யனநடைவாய்ந்
துருவளர்காமன் றன்வென்றிக் கொடிபோன்றொளிர்கின்றதே. ()

## திருமாளிகைத்தேவர்

### திருவிசைப்பா.

———

கூ-ந் திரு கோயில் ௧ ம்-பதிகம்.

ஒளிவளர்விளக்கே யுவப்பிலாவொன்றே
உணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின் றிரண்மணிக்குன்றே
சித்தத்துட்டித்திக்குந்தேனே
அளிவளருள்ளத் தானந்தக்கனியே
அம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்
தொண்டனேன்விளம்புமாவிளம்பே. (உஅ)

## சேந்தனார்

### திருப்பல்லாண்டு

௯-ந் திரு கோயில் பண்-பஞ்சமம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருமூலநாயனார்

### திருமந்திரம்

௧0-ந் திரு

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னருள்
நின்றன னூன்றினு ணான்குணர்ந் தானைந்து
வென்றன னாறு விரிந்தன னேழும்பர்ச்
சென்றவன் றானிருந் தானுணர்ந் தெட்டே (௧)

## காரைக்காலம்மையார்

### அற்புதத் திருவந்தாதி

௧௧-ந் திரு

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் — நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர் (௧)

### திருத்தொண்டர் பெரியபுராணம்

௧௨-ந் திரு

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில்சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். (௧)

திருச்சிற்றம்பலம்.

## உ-ம் வகுப்பு.

### தேவாரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

௧-ந் திரு திருவண்ணாமலை பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை உமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

௨-ந் திரு திருவாலவாய் திருநீற்றுப்பதிகம் பண்-காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் றிருநீறே. (௨)

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே (௩)

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே (௪)

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் றிருநீறே (௫)

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு வந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே. (௬)

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

எயில துஅட் டதுநீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான்திரு நீறே (௮)

இராவண னமேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவா யான்திரு நீறே (௯)

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆல மதுண்ட மிடற்றெம் மாலவா யான்திரு நீறே (௰)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவா யான்திரு நீறே (௧௧)

ஆற்ற லடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே (௧௨)

௯. திருப்பஞ்சாக்கரத் திருப்பதிகம் பண் - காந்தாரபஞ்சமம்

துஞ்சலுந் துஞ்சலி லாத பொழுதினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன அஞ்செ ழுத்துமே (௧)

## திருநாவுக்கரசு நாயனார்.

௰. திருநமச்சிவாயத் திருப்பதிகம் பண் - காந்தாரபஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்

கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே (௧௪)

௪-ந் திரு. திருப்புகலூர் பண் - இந்தளம்.

செய்யர்வெண்ணூலர்கருமான்மறிதுள்ளுங்
கையர்கனைகழல்கட்டியகாலினர்
மெய்யர்மெய்ந்நின்றவர்க்கல்லாதவர்க்கென்றும்
பொய்யர்புகலூர்ப்புரிசடையாரே. (௧௫)

௪-ந் திரு. திருவொற்றியூர் திருநேரிசை

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
ஓம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே (௧௬)

௪-ந் திரு. திருத்தூங்கானைமாடம் திருவிருத்தம்.

பொன்னார்திருவடிக்கொன்றுண்டுவிண்ணப்பம்போற்றிசெய்யும்
என்னாவிகாப்பதற்கிச்சையுண்டேலிருங்கூற்றகல
மின்னாருமூவிலைச்சூலமென்மேற்பொறிமேவுகொண்டல்
துன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தே. (௧௭)

௫-ந் திரு. திருமறைக்காடு திருக்குறுந்தொகை

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. (௧௮)

௬-ந் திரு. திருநாகைக்காரோணம் திருத்தாண்டகம்.

பாரார்பரவும்பழனத்தானைப்
பருப்பதத்தானைப்பைஞ்ஞீலியானைச்
சீரார்செழும்பவளக்குன்றொப்பானைத்
திகழுந்திருமுடிமேற்றிங்கள்சூடிப்
பேராயிரமுடையபெம்மான்றன்னைப்
பிறர்தன்னைக்காட்சிக்கரியான்றன்னைக்
காரார்கடல்புடைசூழ்ந்தணாகைக்
காரோணத்தென்ஞான்றுகாணலாமே. (௧௯)

MAHAMAHOPADHYAYA
DR U V. SWAMINATHA IYER LIBRARY

விண்ணோர்பெருமானை வீட்டானை
வெண்ணீறுமெய்க்கணிந்த மேனியானைப்
பெண்ணுருவனையாணுருவைப் பேடியானைப்
பெரும்பற்றத் தண்புலியூர் மேய பொருளை
அண்ணாமலையானையானைக் காவுடைய
அரியாரூராற்றிரு வம்மான்றன்னைக்
கண்ணைக்கடற்புடைசூழ் கழுநைகக்
காணாணநடெ ங்காலன்றுக காணலாமே. (உ0)

## ரு-ந் திரு திருச்சாய்க்காடு, திருத்தாண்டகம்

நாவலன் காணவானவர்க்கு மேலானான் காண்
விடைமேற்புக வென்றாம் மூழ்பயணைத் தொருமாகும்
அவனவன் காருணனைக் குமாடிரேன் காண
பயன காணனைக யிலைவேலநதியா நிய
காலவன் காண காணவலைக் கருள்செய்தான் காண
கருதுவாரிடய நதுக்கமல நடாறும்
பவனவன் காணசென்றடையாசசெல்வன்றான் காண
சிவனவன் காணசிவபுர மெந்தெசல்வன்றுமே. (உக)

## ரு-ந் திரு திருவாரூர் திருத்தாண்டகம்.

நிலைபெறுமாறெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம்பிரானுடையகோயில்புக்குப்
புலர்வதன்முன்னலகிட்டுமெழுக்குமிட்டுப்
பூமாலைபுனைந்தேத்திப்புகழ்ந்துபாடித்
தலையாரக்கும்பிட்டுக்கூத்துமாடிச்
சங்கராசயபோற்றிபோற்றியென்றும்
அலைபுனல்சேர்செஞ்சடையெம்மாதீயென்றும்
ஆரூராவென்றென்றேயலறாநில்லே. (உஉ)

# சுந்தரமூர்த்திநாயனார்

## எ-ந் திரு திருக்கோளிலிப்பதிகம் - நட்டபாடைகம்.

நீளநினைந்தடியேனுனைநித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள்வாடிவருந்தாமே
கோளிலியெம்பெருமான் குண்டையூர்ச்சிலநெல் லுப்பெற்றேன்
ஆளிலையெம்பெருமானவையட்டித்தரப்பணியே (உங)

எ-ந் திரு. திருமழபாடி பண் - நட்டராகம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
அன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே (உச)

எ-ந் திரு. திருத்தொண்டத்தொகை பண்-கொல்லிக்கௌவாணம்.

இலைமலிந்தவேனம்பியெறிபத்தர்க்கடியேன்
ஏனாதிநாதன்றனடியார்க்குமடியேன்
கலைமலிந்தசீர்நம்பிகண்ணப்பர்க்கடியேன்
கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள்வள்ளன்மானக்கஞ்சாறன்
எஞ்சாதவாட்டாயனடியார்க்குமடியேன்
அலைமலிந்தபுனன்மங்கையானாயர்க்கடியேன்
ஆரூ ரனாரூரிலம்மானுக்காளே. (உரு)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

அ-ந் திரு. திருவாசகம். நீத்தல்விண்ணப்பம்.

கடையவனேனைக்கருணையினாற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்றோல்
உடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள்ளே. ( )

அ-ந் திரு திருக்கோவையார்.

அணியுமமிழ்துமென்னாவியுமாயவன்றில்லைச்சிந்தா
மணியும்பராவறியாமறையோனடிவாழ்த்தலரிற்
பிணியுமதற்குமருந்தும்பிறழப்பிறழமின்னும்
பணியும்புரைமருங்கிற்பெருந்தோழிபடைக்கண்களே. (உஎ)

கூ-ந் திரு. திருவிசைப்பா, கோயில் பண்-பஞ்சமம்.

கற்றவர்விழுங்குங்கற்பகக்கனியைக்
கரையிலாக்கருணைமாகடலை
மற்றவரறியாமாணிக்கமலையை
மதிப்பவர்மனமணிவிளக்கைச

செற்றவர்புரங்கள்செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலைவீற்றிருக்க
கொற்றவன்றன்னைக்கண்டுகண்டுள்ளங்
குளிரவென்கண்குளிர்ந்தனவே. (உஅ)

கூ-ந் திரு. திருப்பல்லாண்டு, கோயில் பண் - பஞ்சமம்

மிண்டுமனத்தவர்போமின்கண்மெய்யடியார்கள்விரைந்துவம்மின்
கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட்செய்மின்குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருளளவில்லதோரானந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றேபல்லாண்டுகூறுதுமே ()

க0-ந் திரு. திருமந்திரம்.

அன்புசிவமிரண்டென்பரறிவிலார்
அன்பேசிவமாவதாருமறிகிலார்
அன்பேசிவமாவதாருமறிந்தபின்
அன்பேசிவமாயமர்ந்திருப்பாரே. (கய)

கக-ந் திரு. பொன்வண்ணத்தந்தாதி.

பொன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமேனிபொலிந்திலங்கு
மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடைவெள்ளிக்குன்றந்
தன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடைதன்னைக்கண்ட
என்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமாகியவீசனுக்கே. (கக)

கஉ-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

ஊனடைந்தவுடம்பின்பிறவியே
தானடைந்தவுறுதியைச்சாருமால்
தேனடைந்தமலர்ப்பொழிற்றில்லையுள்
மாநடஞ்செய்வரதர்பொற்றாடொழ. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

## ௬-ம் வகுப்பு

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

### ௪-ந் திரு. திருச்செங்காட்டங்குடி பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

நறைகொண்டமலர்தூவிவிரையளிப்பநாடோறும்
முறைகொண்டுநின்றடியார்முட்டாமேபணிசெய்யச்
சிறைகொண்டவண்டறைபூஞ்செங்காட்டங்குடியதனுட்
கறைகொண்டகண்டத்தான்கணபதீச்சரத்தானே

### ௧-ந் திரு. திருப்பராய்த்துறை பண் - மேகராகக்குறிஞ்சி

நீறுசேர்வதோர்மேனியர்நேரிழை
கூறுசேர்வதோர்கோலமாய்ப்
பாறுசேர்தலைக்கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடையண்ணலே (௨)

### ௨-ந் திரு. திருவெண்காடு பண் - சீகாமரம்

பேயடையாபிரிவெய்தும்பிள்ளையினோடுள்ளநினை
வாயினவேவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன்வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத்தோயாவாந்தீவினையே ( )

### ௩-ந் திரு. பல்லவனீச்சரம் பண் - பழம்பஞ்சுரம்

பரசுபாணியர்பாடல்வீணையர்
பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தரசுபேணிநின்றாரிவர்தன்மையறிவாரார் (௪)

பட்டநெற்றியர்நட்டமாடுவர்
பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திட்டமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார் (௫)

## திருநாவுக்கரசு நாயனார்.

### ௪-ந் திரு. திருவாரூர் பண் - காந்தாரம்.

பாடிளம்பூதத்தினானும்பவளச்செவ்வாய்வண்ணத்தானும்
கூடிளமென்முலையாளைக்கூடியகோலத்தினானும்

[illegible]
[illegible] (௬)

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௭)

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௮)

[illegible]

மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே (௯)

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே (௰)

ஆளாகா ராளானாரை யடைந்துய்யார்
மீளாஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளாத சுரையோ தொழும்பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே (௧௧)

நடலைவாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலைசேர்வது சொற்பிரமாணமே
கடலினஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலினார்கிடந் தூர்முனி பண்டமே (௧௨)

பூக்கைக்கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக்கொண்டர னாமநவில் கிலார்

ஆக்கைக்கே யிரைதேடி யலமந்து
காக்கைக்கே யிரையாகிக் கழிவரே. (கங)

குறிகளு மடையாளமுங் கோயிலும்
நெறிகளு மவர்நின்றதோர் நேர்மையும்
அறியவா யிரமாரண மோதினும்
பொறியிலீர் மனமென்கொல் புகாததே. (கச)

வாழ்த்தவாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்க்கச்சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்தமாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையே னெடுங்காலமே. (கரு)

எழுதுபாவைநல் லார்திறம் விட்டுநான்
றொழுதுபோதனை நின்றனைப் புக்குச்சூழ்ந்துகொண்
டழுதுகால்வீழ்ந் தயர்புழு வான்பொருட்
டுழுதைநெஞ்சமதி லைந்துன்பங்கின்றதே. (கசு)

நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்குநிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்கமிக்கவர் பூவுநீருங் கண்டு
நக்குநிற்பனவர் தமைநாணியே (கஎ)

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறையநின் றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோனட் டுணர்வு கயிற்றினான்
முறுகவாங்கிக் கடையமுன் னிற்குமே (கஅ)

## சு-ந் திரு. திருப்புள்ளிருக்குவேளூர் திருத்தாண்டகம்.

பேராயிரம் பரவிவானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலாவடியார்க்கென்றும்
வாராதசெல்வம் வருவிப்பானை
மந்திரமுந் தந்திரமு மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருளவல்லான் றன்னைத்
திரிபுரங்கடீயெழத் திண்சிலைகைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்குவேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாட் போக்கினேனே. (க௯)

### ௬-ம் திரு. திருப்பாசூர் திருத்தாண்டகம்.

விண்ணாகி நிலனாகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ணாகி யெழுத்தாகி யியல்பு மாகி
ஏழுலகுந் தொழுதேத்திக் காணநின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சி யாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவ நின்ற
பண்ணாகி இன்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே. (௨௰)

### ௬-ம் திரு. திருவாரூர் திருத்தாண்டகம்.

உயிராவணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுருவெழுதி
உயிராவணஞ் செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டிவாழ்தி
அயிராவணமேறா தானேறேறி
அமரர்நாடாளாதே யாரூ ராண்ட
அயிராவணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணா னோக்காதா ரல்லா தாரே. (௨௧)

### ௬-ம் திரு. திருவினாத் திருத்தாண்டகம்.

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னி னல்லால்
ஒப்புடைய னல்ல னொருவ னல்லன்
ஓரூர னல்ல னோருவம னில்லி
அப்படியு மந்நிறமு மவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே. (௨௨)

## சுந்தரமூர்த்திநாயனார்.

### ௭-ம் திரு. திருக்கடவூர் பண் - நட்டராகம்.

மண்ணீர்தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே

[illegible]
[illegible]

## ரு-ம் திரு. திருக்கேதீச்சரம் - பண் - நட்டராகம்.

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

## ய-ம் திரு. திருத்தொண்டத்தொகை பண்-கொல்லிக்கௌவாணம்.

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே.

# மாணிக்கவாசகசுவாமிகள்.

## அ-ம் திரு. திருவாசகம். கோயின் மூத்த திருப்பதிகம்.

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்குமருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே. (உ

## அ-ந் திரு. திருக்கோவையார்.

சிந்தா மணிதெண் கடலமிர் தந்தில்லை யானருளால்
வந்தா லிகழப் படுமே மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேநின்னை யானகன் றாற்றுவனோ
சிந்தா குலமற் றென்றேனென்னை வாட்டந் திருத்துவதே. (உ௭)

## கூ-ந் திரு. திருவிசைப்பா, திருவீழிமிழலை பண்-பஞ்சமம்.

இத்தெய்வநெறிநன்றென் றிருண்மாயப்
பிறப்பறுவிந்திரசாலப்

பொய்த்தெய்வநெறிநான்புகாவகைபுரிந்த
புராணசிந்தாமணிவைத்த
மெய்த்தெய்வநெறிநான்மறையவர்வீதி
மிழலைவிண்ணிழிசெழுங்கோயில்
அத்தெய்வநெறியிற்சிவமலாதவமும்
அறிவரோவறிவுடையோரே. (உஅ)

## கூ-ந் திரு. திருப்பல்லாண்டு, கோயில் பண்-பஞ்சமம்

நிட்டையிலாவுடனீத்தென்னை யாண்டநிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுந்திறங்களுமேசிந்தித்
தட்டமூர்த்திக்கென்னகநெகவூறுமமிர்தினுக்காலநிழற்
பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே

## கo-ந் திரு திருமந்திரம்

நான்பெற்றவின்பம்பெறுகவிவ்வையகம்
வான்பற்றிநின்றமறைப்பொருள்சொல்குவன்
ஊன்பற்றிநின்றவுணர்வுறுமந்திரந்
தான்பற்றப்பற்றத்தலைப்படுந்தானே. (கூo)

## கக-ந் திரு பொன்வண்ணத்தந்தாதி.

சொல்லாதனகொழுநாவல்லசோதியுட்சோதிதன்பேர்
செல்லாசெவிமரந்தேறித்தொழாதகைமண்டிணிந்த
கல்லாநினையாமனம்வணங்காத்தலையும்பொறையாம்
அல்லாவயவந்தானும்மனிதர்க்கசேதனமே (கூக)

## கஉ-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

தண்ணளிவெண்குடைவேந்தன்செயல்கண்டுதரியாது
மண்ணவர்கண்மழைபொழிந்தார்வானவர்பூமழைபொழிந்தார்
அண்ணலவன்கண்ணெதிரேயணிவீதிமழவிடைமேல்
விண்ணவர்கடொழநின்றான்வீதிவிடங்கப்பெருமான். (கூஉ)

திருச்சிற்றம்பலம்.

## ௪-ம் வகுப்பு.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

### ௧-ந் திரு. திருக்கோளிலி பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்

நாளாயபோகாமேநஞ்சணியுங்கண்டனுக்கே
ஆளாயவன்புசெய்வோமடநெஞ்சேயரனாமங்
கேளாய்நங்கிளைகிளைக்குங்கேடுபடாத்திறமருளிக்
கோளாயநீக்குமவன்கோளிலியெம்பெருமானே. (௧)

### ௨-ந் திரு. திருச்சாய்க்காடு பண்-சீகாமரம்.

மண்புகார்வான்புகுவர்மனமிளையார்பசியாலுங்
கண்புகார்பிணியறியார்கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடநெடுவீதித்
தண்புகார்சாய்க்காட்டெந்தலைவன்றாள்சார்ந்தாரே. (௨)

### ௩-ந்திரு. நமச்சிவாயத்திருப்பதிகம் பண் - கௌசிகம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி
ஓதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினுமெய்ப்பொருளாவது
நாதனாமநமச்சிவாயவே. (௩)

நம்புவார்நமர் நாமநவிற்றினல்
வம்புநாண்மலர்வார்மதுவொப்பது
செம்பொனார்திலகம்முலகுக்கெலா
நம்பனாமநமச்சிவாயவே. (௪)

நெக்குள்ளார்வமிகப்பெருகிநினைந்
தக்குமாலைகொடங்கையிலெண்ணுவார்
தக்கவானவராய்த்தகுவிப்பது
நக்கனாமநமச்சிவாயவே. (௫)

இயமன்றூதருமஞ்சுவரின்சொலால்
நயம்வந்தோதவல்லார்தமைநண்ணினல்
நியமந்தானினைவார்க்கினியானெற்றி
நயனனாமநமச்சிவாயவே. (௬)

கொல்வாரேனுங்குணம்பலநன்மைகள்
இல்லாரேனுமியல்புவராயிடின்
எல்லாத்தீங்கையுநீக்குவரென்பரால்
நல்லார்நாமநமச்சிவாயவே. (எ)

மந்தரம்மன பாவங்கண்மேவிய
பந்தனையவர்தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமால்
நந்திநாமநமச்சிவாயவே. (அ)

நரகமேழ்புகநாடினராயினும்
உரைசெய்வாயினராயினுருத்திரர்
விரவியேபுகுவித்திடுமென்பரால்
வரதனாமநமசிவாயவே. (௯)

மல
தலங்கொள்கால்விரல்சங்கரனூன்றலும்
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை
நலங்கொணாமநமச்சிவாயவே. (௰)

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பரா
யாதுங்காண்பரிதாகியலந்தவர்
ஓதுநாநமச்சிவாயவே. (கக)

கஞ்சிமண்டையர்கையினுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர்விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய்
நஞ்சுள்கண்டனமச்சிவாயவே. (கஉ)

நந்திநாமநமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெலாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே. (கங)

## திருநாவுக்கரசுநாயனார்.

### ௪-ந் திரு. திருவாரூர் பண் - சீகாமரம்.

சூலப்படையானைச்சூழாகவீழருவிக்
கோலத்தோட்குங்குமஞ்சேர்குன்றெட்டுடையானைப்

பாலொத்தமென்மொழியாள்பங்கனைப்பாங்காய
ஆலத்தின்கீழானைநான் கண்டதாரூரே (கச)

சு-ந் திரு. திருவாரூர் திருவிருத்தம்.

வெம்பினைப்பேசிவிடக்கினையோம்பிவினைபெருக்கித்
தும்பினைத்தூர்த்தங்கோர்சுற்றந்துணையென்றிருந்திர்தொண்டீர்
ஆம்பலம்பூம்பொய்கையாரூரமர்ந்தானடிநிழற்கீழ்ச்
சாம்பலைப்பூசிச்சலமின்றித்தொண்டுபட்டுய்மின்களே. (கரு)

சு-ந் திரு திருமறைக்காடு திருநேரிசை.

விண்ணினார்விண்ணவர்க்காய்மிக்கார்வேதங்கள்விரும்பியோதப்
பண்ணினார்கின்னரங்கள்பத்தர்கள்பாடியாடக்
கண்ணினார்கண்ணிணுள்ளேசோதியாய்நின்றவெந்தை
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ. (கசு)

ரு-ந் திரு. திருக்குடமூக்கு திருக்குறுந்தொகை

காமியஞ்செய்துகாலங்கழியாதே
ஓமியஞ்செய்தங்குள்ளத்துணர்மினோ
சாமியோடுசரச்சுவதியவள்
கோமியும்முறையுங்குடமூக்கிலே. (கஎ)

சு-ந் திரு. திருநல்லூர் திருத்தாண்டகம்.

நினைந்துருகுமடியாரைநையவைத்தார்
நில்லாமேதீவினைகணீங்கவைத்தார்
சினந்திருகுகளிற்றுரிவைப்போர்வைவைத்தார்
செழுமதியின்றளிர்வைத்தார்சிறந்துவானோர்
இனந்துருவிமணிமகுடத்தேறத்துற்ற
இனமலர்கள்போதவிழ்ந்துமதுவாய்ப்பில்கி
நனைந்தனையதிருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (கஅ)

சு-ந் திரு. திருவீழிமிழலை திருத்தாண்டகம்

கண்ணவன்காண்கண்ணொளிசேர்காட்சியான்காண்
கந்தருவம்பாட்டிசையிற்காட்டுகின்ற
பண்ணவன்காண்பண்ணவற்றின்திறலானான்காண்
பழமாகிச்சுவையாகிப்பயக்கின்றான்காண்

மண்ணவன்காண்டீயவன்காணீரானான்காண்
வந்தலைக்குமாருதந்தான்காண்மழைமேகஞ்சேர்
விண்ணவன்காண்விண்ணவர்க்குமேலானான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (கசு)

ரு-ந் திரு. திருவாலவாய் திருத்தாண்டகம்.

வாயானைமனத்தானைமனத்துணின்ற
கருத்தானைக்கருத்தறிந்துமுடிப்பான்றன்னைத்
தூயானைத்தூவெள்ளையேற்றான்றன்னைச்
சுடர்த்திங்கட்சடையானைத்தொடர்ந்துநின்ற
தாயானைத்தவமாயதன்மையானைத்
தலையாயதேவாதிதேவர்க்கென்றுஞ்
சேயானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனே. (உ௰)

ரு-ந் திரு நின்ற திருத்தாண்டகம்.

மண்ணாகிவிண்ணாகிமலையுமாகி
வயிரமுமாமாணிக்கந்தானேயாகிக்
கண்ணாகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக்
கலையாகிக்கலைஞானந்தானேயாகிப்
பெண்ணாகிப்பெண்ணுக்கோராணுமாகிப்
பிரளயத்துக்கப்பாலோரண்டமாகி
எண்ணாகியெண்ணுக்கோரெழுத்துமாகி
எழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (உக)

## சுந்தரமூர்த்தி நாயனார்.

எ-ந் திரு. திருவாரூர் பண் - இந்தளம்.

இறைகளோடிசைந்தவின்பமின்பத்தோடிசைந்தவாழ்வு
பறைகிழித்தனையபோர்வைபற்றியானோக்கினேற்குத்
திறைகொணர்ந்தீண்டித்தேவர்செம்பொனுமணியுந்தூவி
அறைகழலிறைஞ்சுமாரூரப்பனேயஞ்சினேனே. (உஉ)

எ- ந் திரு. திருப்பாண்டிக் கொடுமுடி பண்-பழம்பஞ்சுரம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்

கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே (௨௩)

### ௭-ந் திரு. திருவாரூர் பண்-பழம்பஞ்சுரம்.

எழிசையாயிசைப்பயனாயின்னமுதாயென்னுடைய
தோழனுமாயான்செய்யுந்துரிசுகளுக்குடனாகி
மாழையொண்கண்பரவையைத்தந்தாண்டானைமதியில்லா
எழையேன்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௨௪)

### ௭-ந் திரு. திருத்தொண்டத்தொகை பண்-கொல்லிக்கௌவாணம்.

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்றனடியார்க்குமடியேன்
பெருநம்பிகுலச்சிறைதனடியார்க்குமடியேன்
பெருமழலைக்குறும்பர்க்கும்பேயார்க்குமடியேன்
ஒருநம்பியப்பூதியடியார்க்குமடியேன்
ஒலிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கர்க்கடியேன்
அருநம்பிநமிநந்தியடியார்க்குமடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே. (௨௫)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

### ௮-ந் திரு. திருவாசகம், கோயிற்றிருப்பதிகம்.

அன்பினாலடியேனாவியோடாக்கையானந்தமாய்க்கசிந்துருக
என்பரமல்லாவின்னருடந்தாயானிதற்கிலனோர்கைம்மாறு
முன்புமாய்ப்பின்புமுழுதுமாய்ப்பரந்தமுத்தனேமுடிவிலாமுதலே
தென்பெருந்துறையாய்சிவபெருமானேசீருடைச்சிவபுரத்தரசே.

### ௮-ந் திரு. திருக்கோவையார்.

சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளும்
உறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின்
துறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ
இறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே. (௨௭)

### ௯-ந் திரு. திருவிசைப்பா, திருவிடைக்கழி பண்-பஞ்சமம்.

மாலுலாமனந்தந்தென்கையிற்சங்கம்
வவ்வினான்மலைமகண்மதலை

மேலுலாந்தேவர்குலமுழுதாளுங்
  குமரவேள்வள்ளிதன்மணாளன்
சேலுலாங்கழனித்திருவிடைக்கழியில்
  திருக்குராநீழற்கீழ்நின்ற
வேலுலாந்தடக்கைவேந்தனென்சேந்தன்
  என்னுமென்மெல்லியலிவளே. (௨௮)

**௯-ந் திரு. திருப்பல்லாண்டு, கோயில் பண்-பஞ்சமம்.**

சொல்லாண்டசுருதிப்பொருள்
  சோதித்ததூய்மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்
  சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரண்மேரு
  விடங்கன்விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தாற்கே
  பல்லாண்டுகூறுதுமே. (௨௯)

**௧௰-ந் திரு. திருமந்திரம்.**

அவனுமவனுமவனையறியார்
அவனையறியுமறிவானுமில்லை
அவனுமவனுமவனையறியின்
அவனுமவனுமவனிவனாமே. (௩௰)

**௧௧-ந் திரு. பொன்வண்ணத்தந்தாதி.**

ஒழித்தேன்பிறவியையூர்ந்தேனுவகையையோங்கிற்றுள்ளம்
இழித்தேனுடம்பினையேலேன்பிறரிடையிம்மையும்
பழித்தேன்பழியேவிளைக்கும்பஞ்சேந்தியக்குஞ்சரமுந்
தெழித்தேன்சிவனடிசேர்ந்தேனினிமிகத்தெள்ளியனே. (௩௧)

**௧௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்**

ண்ணிலாமலர்ந்தவேணியாயுன்றன்றிருநடங்கும்பிடப்பெற்று
ண்ணிலேவந்தபிறவியேயெனக்குவாலிதாமின்பமாமென்று
ண்ணிலானந்தவருவிநீர்சொரியக்கைம்மலருச்சிமேற்குவித்துப்
ண்ணினானீடியறிவரும்பதிகம்பாடினார்பரவினார்பணிந்தார். (௩௨)

திருச்சிற்றம்பலம்.

## ௫-ம் வகுப்பு.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

### ௧-ந் திரு திருவண்ணாமலை பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின்றதிரவெருவித்தொருவின்னிரையோடும்
ஆமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௧)

### ௧-ந் திரு. கோயில் பண் - குறிஞ்சி.

கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப்பற்றாபாவமே. (௨)

பறப்பைபடுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
பிறப்பில்பெருமானைப்பின்றாழ்சடையானை
மறப்பிலார்கண்டீர்மையறீர்வாரே. (௩)

மையாரொண்கண்ணார்மாடநெடுவீதிக்
கையாற்பந்தோச்சுங்கழிசூழ்தில்லையுட்
பொய்யாமறைபாடல்புரிந்தானுலகேத்தச்
செய்யானுறைகோயில்சிற்றம்பலந்தானே. (௪)

நிறைவெண்கொடிமாடநெற்றிநேர்தீண்டப்
பிறைவந்திறைதாக்கும்பேரம்பலந்தில்லைச்
சிறைவண்டறையோவாச்சிற்றம்பலமேய
இறைவன்கழலேத்துமின்பமின்பமே. (௫)

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே. (௬)

வருமாந்தளிர்மேனிமாதோர்பாகமாந்
திருமாந்தில்லையுட்சிற்றம்பலமேய
கருமானுரியாடைக்கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லாற்பேணாதுள்ளமே. (எ)

அலையார்புனல்சூடியாகத்தொருபாக
மலையாண்மகளோடுமகிழ்ந்தானுலகேத்தச்
சிலையாலெயிலெய்தான்சிற்றம்பலந்தன்னைத்
தலையால்வணங்குவார்தலையானார்களே. (அ)

கூர்வாள்க்கன்றன்வலிமைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே. (கூ)

கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினான்
சேணார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே. (ய)

பட்டத்துவராடைப்படிமங்கொண்டாடு
முட்டைக்கட்டுரைமொழிகேளாதே
சிட்டர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
நட்டப்பெருமானைநாளுந்தொழுவேமே. (கக)

ஞாலத்துயர்காழிஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை
கோலத்தார்பாடவல்லார்நல்லாரே. (கஉ)

**உ-ந் திரு. திருமயிலாப்பூர் பண் - சீகாமரம்.**

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதேபோதியோபூம்பாவாய். (கங)

**௩-ந் திரு. கோயில் பண் - காந்தாரபஞ்சமம்.**

ஆடினாய்நறுநெய்யொடுபாலயிரந்தணர்பிரியாதசிற்றம்பல
நாடினையிடமாநறுங்கொன்றைநயந்தவனே

பாடிஞய்மறையோடுபல்கீதமும்பல்சடைப்பனிகால்கதிர்வெண்டிங்கள், சூடிஞயருளாய்சுருங்கவெமதுதொல்வினையே. (கச)

## திருநாவுக்கரசுநாயஞர்.

### ச-ந் திரு. திருவேகம்பம் பண் - காந்தாரம்.

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானைவிடையேறும்வித்தகனை
அரவாடச்சடைதாழவங்கையிலனலேந்தி
இரவாடும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. (கரு)

### ச-ந் திரு. திருக்கடவூர்வீரட்டம் திருநேரிசை.

பெரும்புலர்காலைமூழ்கிப்பித்தர்க்குப்பத்தராகி
அரும்பொடுமலர்கள்கொண்டங்கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல்விளக்குத்தூபம்விதியிஞலிடவல்லார்க்குக்
கரும்பினிற்கட்டிபோல்வார்கடவூர்வீரட்டஞரே. (கசு)

### ச-ந் திரு. திருச்சத்திமுற்றம் திருவிருத்தம்.

கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குந்தழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (கஎ

### ரு-ந் திரு. திருவிடைமருதூர் திருக்குறுந்தொகை.

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினுந்
தனிமுடிகவித்தாளுமரசினும்
இனியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே. (கஅ)

### சு-ந் திரு. திருவாரூர் திருத்தாண்டகம்.

திருமணியைத்தித்திக்குந்தேனைப்பாலைத்
தீங்கரும்பினின்சுவையைத்தெளிந்ததேறற்
குருமணியைக்குழன்மொந்தைதாளம்வீணை
கொக்கரையின்சச்சரியின்பாணியானைப்
பருமணியைப்பவளத்தைப்பசும்பொன்முத்தைப்
பருப்பதத்திலருங்கலத்தைப்பாவங்தீர்க்கும்

அருமணியையாரூரிலம்மான் றன்னை
அறியாதடிநாயேனயர்த்தவாறே. (௧௬)

## ௬-ந் திரு. திருவாரூர் திருத்தாண்டகம்.

முன்மனவனுடையநாமங்கேட்டாள்
மூர்த்தியவனிருக்கும்வண்ணங்கேட்டாள்
பின்னையவனுடையவாரூர்கேட்டாள்
பெயர்த்துமவனுக்கேபிச்சையானாள்
அன்னையையுமத்தனையுமன்றேநீத்தாள்
அகன்றாளகலிடத்தாராசாரத்தைத்
தன்னைமறந்தாடன்னாமங்கெட்டாள்
தலைப்பட்டாணங்கைதலைவன்றாளே. (௨௰)

## ௬-ந் திரு. திருமறைக்காடு திருத்தாண்டகம்.

தூண்டுசுடரனையசோதிகண்டாய்
தொல்லமரர்சூளாமணிதான்கண்டாய்
காண்டற்கரியகடவுள்கண்டாய்
கருதுவார்க்காற்றவெளியான்கண்டாய்
வேண்டுவார்வேண்டுவதேயீவான்கண்டாய்
மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லா
மாண்டமனத்தார்மனத்தான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௨௧)

## ௬-ந் திரு. திருக்கன்றப்பூர் திருத்தாண்டகம்.

ஊனினுள்ளுயிரைவாட்டியுணர்வினார்க்கெளியராகி
ஆவியார்போவதுமேயகத்தார்கூடி
மையினாற்கண்ணெழுதிமாலைசூட்டி
மயானத்திலிடுவதன்முன்மாலைசூடும்
ஐயனார்க்காளாகியன்புமிக்கு
அகங்குழைந்துமெய்யரும்பியடிகள்பாதங்
கையினாற்றொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே. (௨௨)

## சுந்தரமூர்த்திநாயனார்.

### எ-ந் திரு திருப்புகலூர் பண் - கொல்லி.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்வினுந்தொண்டர்தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்கெடலுமாம்
அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௨௩)

### எ-ந் திரு. திருப்புன்கூர் பண் - தக்கேசி.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுத
அவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றன்னாருயிரதனை
வவ்வினாய்க்குன்றன்வன்மைகண்டடியேன்
எந்தைநீயெனைநமன்றமர்நலியில்
இவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே (௨௪)

### எ-ந்திரு திருத்தொண்டத்தொகை பண்-கொல்லிக்கௌவாணம்

வம்பறாவரிவண்டுமணநாறமலரும்
மதுமலர்நற்கொன்றையானடியலாற்பேணா
எம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியேன்
ஏயர்கோன்கலிக்காமனடியார்க்குமடியேன்
நம்பிரான்றிருமூலனடியார்க்குமடியேன்
நாட்டமிகுதண்டிக்குமூர்க்கற்குமடியேன்
அம்பரான்சோமாசிமாறனுக்குமடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே (௨௫)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

### அ-ந் திரு திருவாசகம், அடைக்கலப்பத்து.

செழுக்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
அழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே. (௨௬)

### அ-ந் திரு. திருக்கோவையார்.

நேயத்ததாய்நென்னலென்னைப்புணர்ந்துநெஞ்சநெகப்போய்
ஆயத்ததாயமிழ்தாயணங்காயரனம்பலம்போல்

தேயத்ததாயென்றன்சிந்தையராய்த்தெரிபிற்பெரிது
மாயத்ததாகியிதோவந்துநின்றதென்மன்னவியே (௪௭)

### கூ-ந் திரு. திருவிசைப்பா. திருவிடைக்கழி பண் பஞ்சமம்.

இவ்வரும்பிறவிப்பௌவநீர்நீந்தும்
ஏழையேற்கென்னுடன்பிறந்த
ஐவரும்பகையேயார்துணையென்ற
லஞ்சலென்றருள்செய்வான்கோயில்
கைவரும்பழனங்குழைத்தசெஞ்சாலிக்
கடைசியர்களைகருநீலஞ்
செய்வரம்பரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (௪அ)

### கூ-ந் திரு. திருப்பல்லாண்டு கோயில் பண் - பஞ்சமம்.

சீருந்திருவும்பொலியசிவலோகநாயகன்சேவடிக்கீழ்
ஆரும்பெறாதவறிவுபெற்றேன்பெற்றதார்பெறுவாருலகில்
ஊருமுலகுங்கழறவுழறியுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம்பல்லாண்டுகூறுதுமே. (௪௯)

### க0-ந் திரு. திருமந்திரம்

அகரமாயிரமந்தணர்க்கீயிலென்
சிகரகோபுரஞ்செய்துமுடிக்கிலென்
பகருஞானிபகலூணலத்துக்கு
நிகரிலையென்பதுநிச்சயந்தானே. (ரு0)

### கக-ந் திரு. கைலைபாதிகாளத்திபாதிஅந்தாதி.

சொல்லும்பொருளுமேதூத்திரியுநெய்யுமா
நல்விடிஞ்சிலென்னுடையநாவாகச்—சொல்லரிய
வெண்பாவிளக்காவியன்கயிலைமேலிருந்த
பெண்பாகர்க்கேற்றினேன்பெற்று. (ருக)

### கஉ-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

ஆதியாய்நடுவுமாகியளவிலாவளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித்தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப்பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றிபோற்றி. (ருஉ)

திருச்சிற்றம்பலம்.

## ௪-ம் வகுப்பு.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

### ௧-ந் திரு. திருநள்ளாறு பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாள்தன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௧)

### ௨-ந் திரு. திருப்புள்ளிருக்குவேளூர் பண்-சீகாமரம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதிய
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்குவேளூரே. (௨)

### ௩-ந் திரு. திருவாவடுதுறை பண்-காந்தாரபஞ்சமம்.

இடரினுந்தளரினுமெனதுறுநோய்,தொடரினுமுனகழறொழுதெழு
வேன், கடறனிலமுதொடுகலந்தநஞ்சை. மிடறினிலடக்கியவேதிய
னே, இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே,
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே (௩)

## திருநாவுக்கரசுநாயனார்.

### ௪-ந் திரு. திருவதிகைவீரட்டானம் பண்-காந்தாரம்.

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ்சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமு
மண்ணலரண்முரணேறுமகலம்வளாயவரவுந்
திண்ணென்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௪)

### ௫-ந் திரு. திருவாவடுதுறை திருநேரிசை.

மஞ்சனேமணியுமானாய்மரகதத்திரளுமானாய்
நெஞ்சுளேபுகுந்துநின்றுநினைதருநிகழ்வினானே
துஞ்சும்போதாகவந்துதுணையெனக்காகிநின்று
வஞ்சனென்றருளவேண்டுமாவடுதுறையுளானே. (௫)

### ௪-ந் திரு. திருவாரூர் திருவிருத்தம்.

ஆராய்ந்தடித்தொண்டராணிப்பொன்னாரூரகத்தடக்கிப்
பாரூர்பரிப்பத்தம்பங்குனியுத்திரம்பாற்படுத்தா
னாரூர்நறுமலர்நாதனடித்தொண்டனம்பிநந்தி
நீராற்றிருவிளக்கிட்டமைநீணாடறியுமன்றே. (௬)

### ௫-ந் திரு கோயில் திருக்குறுந்தொகை.

பனைக்கைமும்மதவேழமுரித்தவ
னினைப்பவர்மனம்கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனோ. (௭)

### ௬-ந் திரு திருவாவடுதுறை திருத்தாண்டகம்.

நம்பனைநால்வேதங்கரைகண்டானை
ஞானப்பெருங்கடலைநன்மைதன்னைக்
கம்பனைக்கல்லாலிருந்தான்றன்னைக்
கற்பகமாயடியார்கட்கருள்செய்வானைச்
செம்பொன்னைப்பவளத்தைத்திரளுமுத்தைத்
திங்களைஞாயிற்றைத்தீயைநீரை
யம்பொன்னையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௮)

### ௬-ந் திரு. திருப்பூந்துருத்தி திருத்தாண்டகம்.

எனக்கென்றுமினியானையெம்மான்றன்னை
யெழிலாருமேகம்பமேயான்றன்னை
மனக்கென்றும்வருவானைவஞ்சர்நெஞ்சினில்லானை

தனக்கென்றுமடியேனையாளாக்கொண்ட
சங்கரனைச்சங்கவார்குழையான்றன்னைப்
புனக்கொன்றைத்தாரணிந்தபுனிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திகண்டேனானே. (௯)

### ௬-ந் திரு. திருவாரூர் திருத்தாண்டகம்.

பற்றிநின்றபாவங்கள்பாற்றவேண்டிற்
பரகதிக்குச்செல்வதொருபரிசுவேண்டிற்

சுற்றிநின் றசூழ்வினைகள்வீழ்க்கவேண்டிற்
    சொல்லுகேன்கேள்நெஞ்சேதுஞ்சாவண்ண
முற்றவருமுறுதுணையுநீயேயென்று
    முன்னையலாலொருதெய்வமுள்கேனென்றும்
புற்றரவக்கச்சார்த்தபுனிதாவென்றும்
    பொழிலாரூராவென்றேபோற்றுகில்லே. (௰)

### ௩-ந் திரு. திருவாரூர் திருத்தாண்டகம்

புகையெட்டும்போக்கெட்டும்புலன்களெட்டும்
    பூதலங்களவையெட்டும்பொழில்களெட்டுங்
கலையெட்டுங்காப்பெட்டுங்காட்சியெட்டுங்
    கழற்சேவடியடைந்தார்களைகளெட்டு
நகையெட்டுநாளெட்டுநன்மையெட்டு
    நலஞ்சிறந்தார்மனத்தகத்துமலர்களெட்டுந்
திகையெட்டுந்தெரிப்பதற்குமுன்னேபின்னே
    திருவாரூர்கோயிலாக்கொண்டநாளே (௧௧)

## சுந்தரமூர்த்தி நாயனார்.

### ௭-ந் திரு. திருவாவடுதுறை பண் - தக்கேசி.

கங்கைவார்சடையாய்கணநாதா
    காலகாலனேகாமனுக்கனலே
பொங்குமாகடல்விடமிடற்றானே
    பூதநாதனேபுண்ணியாபுனிதா
செங்கண்மால்விடையாய்தெளிதேனே
    தீர்த்தனே திருவாவடுதுறையு
ளங்கணாவெனையஞ்சலென்றருளா
    யாரெனக்குறவமரர்களேறே. (௧௨)

மண்ணின்மேன்மயங்கிக்கிடப்பேனை
    வலியவந்தெனையாண்டுகொண்டானே
கண்ணிலேனுடம்பில்லடுநோயாற்
    கருத்தழிந்துனக்கேபொறையானேன்
றெண்ணிலாவெறிக்குஞ்சடையானே
    தேவனே திருவாவடுதுறையு
ளண்ணலேயெனையஞ்சலென்றருளா
    யாரெனக்குறவமரர்களேறே. (௧௩)

ஒப்பிலாமுலையாளொருபாகா
வுத்தமாமத்தமார்தருசடையாய்
முப்புரங்களைத்தீவளைத்தங்கே
மூவருக்கருள்செய்யவல்லானே
செப்பவானிழற்கீழிருந்தருளுஞ்
செல்வனே திருவாவடுதுறையு
ளப்பனேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௪)

கொதியினால்வருகாளிதன்கோபங்
குறையவாடியகூத்துடையானே
மதியிலேனுடம்பில்லடுநோயான்
மயங்கினேன்மணியேமணவாளா
விதியினாலிமையோர்தொழுதேத்தும்
விகிர்தனே திருவாவடுதுறையு
ளதிபனேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௫)

வர்தவானரக்கன்வலிதொலைத்து
வாழுநாள்கொடுத்தாய்வழிமுதலே
வெந்தவெண்பொடிபூசவல்லானே
வேடனாய்விசயற்கருள்புரிந்த
விந்துசேகரனேயிமையோர்சீ
ரீசனே திருவாவடுதுறையு
ளந்தணாவெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௬

குறைவிலாநிறைவேகுணக்குன்றே
கூத்தனேகுழைக்காதுடையானே
யுறவிலேனுனையன்றிமற்றடியே
னொருபிழைபொறுத்தாலிழிவுண்டோ
சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூர்ச்
செம்பொனே திருவாவடுதுறையு
ளறவனேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௭

வெய்யமாகரியீருரியானே
வேங்கையாடையினாய்விதிமுதலே
மெய்யனேயடலாழியன்றரிதான்
வேண்டநீகொடுத்தருள்புரிவிகிர்தா
செய்யமேனியனேதிகழொளியே
செங்கணாதிருவாவடுதுறையு
ளையனேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௮)

கோதிலாவமுதேயருள்பெருகு
கோலமேயிமையோர்தொழுகோவே
பாதிமாதொருகூறுடையானே
பசுபதீபரமாபரமேட்டி
தீதிலாமலையேதிருவருள்சேர்
சேவகாதிருவாவடுதுறையு
ளாதியேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௧௯)

வானநாடனேவழித்துணைமருந்தே
மாசிலாமணியேமறைப்பொருளே
யேனமாவெயிறாமையுமென்பு
மீடுதாங்கியமார்புடையானே
தேனெய்பாலயிராட்டுகந்தானே
தேவனேதிருவாவடுதுறையு
ளானையேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே. (௨௰)

வெண்டலைப்பிறைகொன்றையுமரவும்
வேரிமத்தமும்விரவிமுன்முடித்த
விண்டைமாமலர்ச்செஞ்சடையானை
யீசனைத்திருவாவடுதுறையு
ளண்டவாணனைச்சிங்கடியப்ப
னணுக்கவன்றொண்டனார்வத்தாலுரைத்த
தண்டமிழ்மலர்பத்தும்வல்லார்கள்
சாதலும்பிறப்புமறுப்பாரே. (௨௧)

### எ-ந் திரு. திருமறைக்காடு பண் - காந்தாரம்.

யாழைப்பழித்தன்னமொழிமங்கையொருபங்கன்
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணிற்
றாழைப்பொழிலூடேசென்றுபூழைத்தலைநுழைந்து
வாழைக்கனிகூழைக்குரங்குண்ணும்மறைக்காடே. உஅ)

### எ-ந் கோயில் பண் - குறிஞ்சி.

மடித்தாடுமடிமைக்கணன்றியேமனனேநீவாழுநாளுந் [ன்
தடுத்தாட்டித்தருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வா
கடுத்தாடுகரதலத்திற்றமருகமுமெரியகலுங்கரியபாம்பும்
பிடித்தாடிபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. ()

### எ-ந் திரு. கூடலையாற்றூர் பண்-புறநீர்மை.

வடிவுடைமழுவேந்திமதகரியுரிபோர்த்துப்
பொடியணிதிருமேனிப்புரிகுழலுமையோடுங்
கொடியணிநெடுமாடக்கூடலையாற்றூரி
லடிகளிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (உ௪)

### எ-ந்திரு. திருத்தொண்டத்தொகை பண்-கொல்லிக்கௌவாணம்.

வார்கொண்டவனமுலையாளுமைபங்கன்கழலே
மறவாதுகல்லெறிந்தசாக்கியற்குமடியேன்
சீர்கொண்டபுகழ்வள்ளல்சிறப்புலிக்குமடியேன்
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டர்க்கடியேன்
கார்கொண்டகொடைக்கழறிற்றறிவார்க்குமடியேன்
கடற்காழிக்கணநாதனடியார்க்குமடியே
னார்கொண்டவேற்கூற்றன்களந்தைக்கோனடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (உ௫)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

### அ-ந் திரு. திருவாசகம், புணர்ச்சிப்பத்து.

அல்லிக்கமலத்தயனுமாலுமல்லாதவருமமரர்கோனுஞ்
சொல்லிப்பரவுநாமத்தானைச்சொல்லும்பொருளுமிறந்தசுடரை
நெல்லிக்கனியைத்தேனைப்பாலைநிறையின்னமுதையமுதின்சுவை
யைப், புல்லிப்புணர்வதென்றுகொலோவென்பொல்லாமணியைப்
புணர்ந்தே. (உகூ)

## அ-ந் திரு. திருக்கோவையார்.

யாழுமெழுதியெழின் முத்தெழுதியிருளின்மென்பூச்
சூழுமெழுதியொர் தொண்டையுந்தீட்டியென் றோல்பிறவி
யேழுமெழுதாவகைசிதைத்தோன் புலியூரிளமாம்
போழுமெழுதிற்றோர் கொம்பருணடேற்கொண்டுபோதுகவே. (௨௭)

## ௯-ந் திரு. திருவிசைப்பா, திருமுகத்தலை பண்-பஞ்சமம்.

புவனநாயகனேயகவுயிர்க்கமுதே
பூரணாவாரணம்பொழியும்
பவளவாய்மணியேபணிசெய்வார்க்கிரங்கும்
பசுபதீபன்னகாபரணா
அவனிஞாயிறுபோன் றருள்புரிந்தடியே
னகத்திலுமுகத்தலைமூதூர்த்
தவளமாமணிப்பூங்கோயிலுமமர்ந்தாய்
தனியனேன் றனிமைநீங்குதற்கே. (௨அ)

## ௯-ந் திரு திருப்பல்லாண்டு, கோயில் பண் - பஞ்சமம்.

சேலுங்கயலுந்திளைக்குங்கண்ணாரிளங்கொங்கையிற்செங்குங்குமம்
போலும்பொடியணிமார்பிலங்குமென் றுபுண்ணியர்போற்றிசைப்ப
மாலுமயனுமறியாநெறிதந்துவந்தென்மனத்தகத்தே
பாலுமமுதமுமொத்துநின்றானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௨௯)

## ௧௦-ந் திரு. திருமந்திரம்.

வழுதலைவித்திடப்பாகல்முளைத்தது
புழுதியைத்தோண்டினேன் பூசனிபூத்தது
தொழுதுகொண்டோடினார் தோட்டக்குடிகள்
முழுதும்பழுத்ததுவாழைக்கனியே. (௩௰)

## ௧௧-ந் திரு. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை.

கழல்வண்ணமுஞ்சடைக்கற்றையுமற்றவர் காணகில்லார்
தழல்வண்ணனங்கண்டேதளர்ந்தாரிருவரந்தாமரையி
னிழல்வண்ணம்பொன்வண்ணநீர்நீலவண்ணநெடியவண்ண
மழல்வண்ணமுந்நீர்வலஞ்சுழியாள்கின் றவண்ணலையே. (௩௧)

## ௧௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

சொல்லுவதறியேன்வாழிதோற்றியதோற்றம்போற்றி
வல்லைவந்தருளியென்னைவழித்தொண்டுகொண்டாய்போற்றி
யெல்லையிலின்பவெள்ளமெனக்கருள்செய்தாய்போற்றி
தில்லையம்பலத்துளாடுஞ்சேவடிபோற்றியென்ன. (௩௨)

திருச்சிற்றம்பலம்.

# எ-ம் வகுப்பு.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

### க-ந் திரு. ஸ்ரீபுகலியும் திருவீழிமிழலையும் விஞவுரை பண்- நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

மைம்மருபூங்குழற்கற்றைதுற்றவாளுநன்மான்விழிமங்கையோடும் பொய்ம்மொழியாமறையோர்களேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே யெம்மிறையேயிமையாதமுக்கணீசவெனேசவிதென்கொல்சொல் லாய், மெய்ம்மொழிநான்மறையோர்மிழலைவிண்ணிழிகோயில்விரு ம்பியதே. (க)

விண்ணிழிகோயில்விரும்பிமேவும்வித்தகமென்கொலிதென் று சொல்லிப், புண்ணியனைப்புகலிந்நிலாவுபூங்கொடியோடிருந்தானை ப்போற்றி, நண்ணியகீர்த்திநலங்கொள்கேள்விநான்மறைஞானசம் பந்தன்சொன்ன, பண்ணியல்பாடல்வல்லார்களிந்தப்பாரொடுவிண் பரிபாலகரே. (உ)

### உ-ந் திரு. திருமருகல் விடந்தீர்த்ததிருப்பதிகம் பண்-இந்தளம்.

சடையாயெனுமால்சரணீயெனுமால்
விடையாயெனுமால்வெருவாவிழுமான்
மடையார்குவளைமலரும்மருக
லுடையாய்தகுமோவிவளுண்மெலிவே. (௩)

### உ-ந்திரு. திருநாகைக்காரோணம் பண்-செவ்வழி.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றநெடுவெண்ணிலா
வேனற்பூத்தம்மராங்கோதையோடும்விரவுஞ்சடை
வானநாடனமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (ச)

### ௩-ந் திரு. திருவாலவாய் பண்-கொல்லி.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பாலல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ணர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (ரு)

### ௩-ந் திரு. திருவாலவாய் பண்-கௌசிகம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. (௬)

### ௩-ந் திரு. திருவாலவாய் பண்-புறநீர்மை.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைம்மடமானி
பங்கையச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (௭)

## திருநாவுக்கரசுநாயனார்.

### ௪-ந் திரு. திருப்பழனம் பண் - பழந்தக்கராகம்.

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கோடியையே. (௮)

### ௪-ந் திரு. கோயில்திருநேரிசை, பண் - கொல்லி.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
வத்தாவுன்னாடல்காண்பானடியனேன்வந்தவாறே. (௯)

### ௪-ந் திரு. தனித்திருவிருத்தம்.

விண்ணகத்தான்மிக்கவேதத்துளான்விரிநீருடுத்த
மண்ணகத்தான்றிருமாலகத்தான்மருவற்கினிய
பண்ணகத்தான்பத்தர்சித்தத்துளான்பழநாயடியேன்
கண்ணகத்தான்மனத்தான்சென்னியானெங்கறைக்கண்டனே. (௰)

### ௫-ந் திரு. திருநீலக்குடி திருக்குறுந்தொகை.

செய்யமேனியன்றேனொடுபாலயிர்
நெய்யதாடியநீலக்குடியரன்
மையலாய்மறவாமனத்தார்க்கெலாங்
கையிலாமலகக்கனியொக்குமே. (௧௧)

## ௬-ந் திரு. திருப்பூவணம் திருத்தாண்டகம்.

வடிவேறுதிரிசூலந்தோன்றுந்தோன்றும்
வளர்சடைமேலிளமதியந்தோன்றுந்தோன்றுங்
கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன்றுங்
காதில்வெண்குழைதோடுகலந்துதோன்று
மிடியேறுகளிற்றுரிவைப்போர்வைதோன்று
மெழிறிகழுந்திருமுடியுமிலங்கித்தோன்றும்
பொடியேறுதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௨)

ஆணாகிப்பெண்ணாயவடிவுதோன்று
மடியவர்கட்காரமுதமாகித்தோன்று
மூணா பூர்திரிவாணாகித்தோன்று
மொற்றைவெண்பிறைதோன்றும்பற்றார்தம்மேற்
சேணாகவரைவில்லாலெரித்தறோன்றுஞ்
செத்தவர்தமெலும்பினாற்செறியச்செய்த
பூணாணுமரைநாணும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௩)

கல்லாலினீழற்கலந்துதோன்றுங்
கவின்மறையோர்நால்வர்க்குநெறிகளன்று
சொல்லாகச்சொல்லியவாதோன்றுந்தோன்றுஞ்
சூழரவுமான்மறியுந்தோன்றுந்தோன்று
மல்லாதகாலனைமுன்னடர்த்தறோன்று
மைவகையானினைவார்பாலமர்ந்துதோன்றும்
பொல்லாதபுலாலெலும்புபூணாய்த்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௪)

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும்
பன்னிரண்டுகண்ணுடையபிள்ளைதோன்று
நடைமலிந்தவிடையோடுகொடியுந்தோன்று
நான்மறையினொலிதோன்றுநயனந்தோன்று
முடைமலிந்தகோவணமு[illegible]ழுந்தோன்று
மூரல்வெண்சிரமாலையுலாவித்தோன்றும்
புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௫)

மயலாகுந்தன்னடியார்க்கருளுந்தோன்று
மாசிலாப்புன்சடைமேன்மதியந்தோன்று
மியல்பாகவிடுபிச்சையேற்றறோன்று
மிருங்கடனஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றுங்
கயல்பாயக்கடுங்கலுழிக்கங்கைநங்கை
யாயிரமாமுகத்தினொடுவானிற்றோன்றும்
புயல்பாயச்சடைவிரித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௬)

பாராழிவட்டத்தார்பரவியிட்ட
பன்மலருநறும்புகையும்பரந்துதோன்றுஞ்
சீராழித்தாமரையின்மலர்களன்ன
திருந்தியமாநிறத்தசேவடிகடோன்று
மோராழித்தேருடையவிலங்கைவேந்த
னுடறுணித்தவிடர்ப்பாவங்கெடுப்பித்தன்று
போராழிமுன்னீந்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௭)

தன்னடியார்க்கருள்புரிந்ததகவுதோன்றுஞ்
சதுர்முகனைத்தலையரிந்ததன்மைதோன்று
மின்னனையநுண்ணிடையாள்பாகந்தோன்றும்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தறோன்றுந்
துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந்
தூயமாமதியுடனேவைத்தறோன்றும்
பொன்னனையதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௮)

செறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந்
திரிபுரத்தையெரிசெய்தசிலையுந்தோன்றுந்
நெறியதனைவிரித்துரைத்தநேர்மைதோன்றுந்
நெற்றிமேற்கண்டோன்றும்பெற்றந்தோன்றும்
மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்றும்
மலைமகளுஞ்சலமகளும்மலிந்துதோன்றும்
பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௯)

அருப்போட்டுமெட முலைவாள்பாகந்தோன்று
மணிகிளருமுருவென்னவடர்க்குங்கேழன்
மருப்போட்டுமணிவயிரக்கோவைதோன்று
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்
திருக்கோட்டினின்றதோர்திறமுந்தோன்றுஞ்
செக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்போட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
பொழிதிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (உ0)

ஆங்கணைந்தசண்டிக்குமருளியன்று
தன்முடிமேலலர்மாலையளித்தரோன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று
பலபிறவியறுத்தருளும்பரிசுதோன்றுங்
கோங்கணைந்தகூவிளமுமமத்தமும்
குழற்கணிந்தகொள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபொற்புந்தோன்றும்
பொழிதிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (உக)

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுதோன்றும்
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புந்தோன்றும்
பொழிதிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே (உஉ)

## சுந்தரமூர்த்திநாயனார்.

எ- ந்திரு. திருக்கலையநல்லூர் பண்-தக்கராகம்.

குரும்பைமுலைமலர்க்குழலிகொண்டதவங்கண்டு
குறிப்பினொடுஞ்சென்றவடன் குணத்தினைநன்கறிந்து
விரும்பும்வரங்கொடுத்தவளைவேட்டருளிச்செய்த
விண்ணவர்கோன்கண்ணுதலோன்மேவியவூர்வினவி
லரும்பருகேசுரும்பருவவறுபதம்பண்பாட
வணிமயில்கணடமாடுமணிபொழில்சூழயலின்
கரும்பருகேகருங்குவளைகண்வளருங்கழனிக்
கமலங்கண்முகமலருங்கலையநல்லூர்காணே. (உங)

எ-ந் திரு. திருவாரூர் பண் - காந்தாரம்.

கரையுங்கடலுமலையுங்காலையுமாலையுமெல்லா
முரையில்விரவிவருவாமொருவனுருத்திரலோகன்
வரையின்மடமகள்கேள்வன்வானவர்தானவர்க்கெல்லா
மரையனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வாரோகேளீர். ()

எ-ந்திரு. திருத்தொண்டத்தொகைபண்-கொல்லிக்கௌவாணம்.

பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்
பொழிற்கருவூர்த்துஞ்சியபுகழ்ச்சோழற்கடியேன்
மெய்யடியானரசிங்கமுனையரையற்கடியேன்
விரிதிரைசூழ்கடனாகையதிபத்தற்கடியேன்
கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன்கலியன்
கழற்சத்திவரிஞ்சையர்கோனடியார்க்குமடியே
னையடிகள்காடவர்கோனடியார்க்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (உரு)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

அ-ந் திரு. திருவாசகம், அருட்பத்து.

சோதியேசுடரேசூழொளிவிளக்கேசுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றாய்பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத்திருப்பெருந்துறையினிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேயடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. ()

அ-ந் திரு. திருக்கோவையார்.

புரங்கடந்தானடிகாண்பான்புவிவிண்டுபுக்கறியா
திரங்கிடந்தாயென்றிரப்பத்தன்னீரடிக்கென்னிரண்டு
கரங்கடந்தானொன்றுகாட்டமற்றாங்கதுங்காட்டிடென்று
வரங்கிடந்தான்றில்லையம்பலமுன்றிலம்மாயவனே. (உஎ)

கூ-ந் திரு. திருவிசைப்பா, திருப்பூவணம் பண்-பஞ்சமம்.

திருவருள்புரிந்தாளாண்டுகொண்டிங்ஙன்
சிறியனுக்கினியதுகாட்டிப்
பெரிதருள்புரிந்தானந்தமேதருநின்
பெருமையிற்பெரியதொன்றுளதே

மருதரசிருங்கோங்கின்மரஞ்சாடி
வரைவளங்கவர்ந்திழிவைகைப்
பொருதிரைமருங்கோங்காவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௨௮)

## ௯-ந் திரு. திருப்பல்லாண்டு, கோயில் ; பண் - பஞ்சமம்.

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னு
ளாலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௨௯)

## ௧௰-ந் திரு. திருமந்திரம்.

நாசிநுனியினான்மூவிரலிடை
யீசனிருப்பிடமியாருமறிகிலர்
பேசியிருக்கும்பெருமறையம்மறை
கூசியிருக்குங்குணமதுவாமே. (௩௰)

## ௧௧-ந் திரு. மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை.

பண்டந்தமாதரைத்தரமென்றினியனவேபலவுங்
கொண்டந்தநாள்குறுகாமைக்குறுகுவர்கூருணர்விற்
கண்டந்தநீண்முடிக்கார்மதவார்சடைக்கற்றையொற்றை
வெண்டந்தவேழமுகத்தெம்பிரானடிவேட்கையரே. (௩௧)

## ௧௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

நன்மைபெருகருணெறியேவந்தணைந்துநல்லூரின்
மன்னுதிருத்தொண்டனார்வணங்கிமகிழ்ந்தெழும்பொழுதி
லுன்னுடையநினைப்பதனைமுடிக்கின்றோமென்றவர்தஞ்
சென்னிமிசைப்பாதமலர்சூட்டினான்சிவபெருமான். (௩௨)

திருச்சிற்றம்பலம்.

## அ-ம் வகுப்பு.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

### க-ந் திரு. திருமருகலுந் திருச்செங்காட்டங்குடியும் வினாவுரை பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

அங்கமும்வேதமுமோதுநாவரந்தணர்நாளுமடிபரவ
மங்குன்மதிதவழ்மாடவீதிமருகனிலாவியமைந்தசொல்லாய்
செங்கயலார்புனற்செல்வமல்குசீர்கொள்செங்காட்டங்குடியதனுட்
கங்குல்விளங்கெரியேந்தியாடுங்கணபதியீச்சரங்காமுறவே. (௧)

### க-ந் திரு. திருவையாறு பண்-மேகராகக்குறிஞ்சி.

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டைமேலுந்தி
யலமந்தபோதாகவஞ்சேலென்றருள்செய்வானமருங்கோயில்
வலம்வந்தமடவார்கணடமாடமுழவதிரமழையென்றஞ்சிச்
சிலமந்தியலமந்துமரமேறிமுகில்பார்க்குந்திருவையாறே. (௨)

### உ-ந் திரு. திருவாரூர் பண்-காந்தாரம்.

பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சட்டவுண்டு
சிவனதாட்சிந்தியாப்பேதைமார்போலநீவெள்கினாயே
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்ட
னவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௩)

### உ-ந் திரு. கோளறுபதிகம் பண்-பியந்தைக்காந்தாரம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமு
யாசறுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே [டனே

### உ-ந் திரு. திருக்கோடிகா, பண்-நட்டராகம்.

இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றவிச்சையாற்
பொன்றுகின்றவாக்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனற்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே. (௬)

௩-ந் திரு. திருச்சண்பை திருவிசாகம் பண்-சாதாரி.

எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெய்யவளர்தீபமொடுதூபமலிவாய்மையதனா
லந்தியமர்சந்திபலவர்ச்சனைகள்செய்யவமர்கின்றவழகன்
சந்தமலிகொந்தளநன்மாதினொடுமேவுபதிசண்பைநகரே. (௬)

௩-ந் திரு. திருக்கழுமலம் திருவியமகம்.

உற்றுமைசேர்வதுமெய்யினையேயுணர்வதுநின்னருண்மெய்யினையே
கற்றவர்காய்வதுகாமனையேகனல்விழிகாய்வதுகாமனையே
யற்றமறைப்பதுமுன்பணியேயமரர்கள்செய்வதுமுன்பணியே
பெற்றுமுகந்ததுகந்தனையேபிரமபுரத்தையுகந்தனையே. (௭)

௪-ந் திரு. திருவையாறு பண் - காந்தாரம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௮)

௪-ந் திரு. திருவையாறு திருநேரிசை.

கங்கையைச்சடையுள்வைத்தார்கதிர்பொறியரவும்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார்திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார்மான்மறிமழுவும்வைத்தா
ரங்கையுளனலும்வைத்தாரையனையாறனாரே. (௯)

௪-ந் திரு. திருப்பாதிரிப்புலியூர்திருவிருத்தம்.

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே. (௰)

௫-ந் திரு. திருக்கடம்பூர் திருக்குறுந்தொகை.

நங்கடம்பனைப்பெற்றவள்பங்கினன்
றென்கடம்பைத்திருக்கரக்கோயிலான்

றன்கடன்னடியேனையுந்தாங்குத
லென்கடன்பணிசெய்துகிடப்பதே. (கக)

## கூ-ந் திரு. பலவகைத்திருத்தாண்டகம்.

நேர்ந்தொருத்தியொருபாகத்தடங்கக்கண்டு
நிலைதளராவாயிரமாமுகத்தினோடு,
பாய்ந்தொருத்திபடர்சடைமேற்பயிலக்கண்டு
படவரவும்பனிமதியும்வைத்தசெல்வர்
தாந்திருத்தித்தம்மனத்தையொருக்காத்தொண்டர்
தனித்தொருதண்டேன்றிமெய்தளராமுன்னம்
பூந்துருத்திபூந்துருத்தியென்பீராகிற்
பொல்லாப்புலாற்றுருத்திபோக்கலாமே. (கஉ)

ஐத்தானத்தகம்பிடறுசுற்றியாங்கே
யகத்தடைந்தாலியாதொன்றுமிடுவாரில்லை
மைத்தானக்கண்மடவார்தங்களோடு
மாயமனைவாழ்க்கைமகிழ்ந்துவாழ்வீர்
பைத்தானத்தொண்மதியும்பாம்புநீரும்
படர்சடைமேல்வைத்துகந்தபண்பன்மேய
நெய்த்தானநெய்த்தானமென்பீராகி
னிலாவாப்புலாற்றானநீக்கலாமே. (கங)

பொய்யாறுவாறேபுனைந்துபேசிப்
புலர்ந்தெழுந்தகாலைப்பொருளேதேடிக்
கையாறுக்கரணமுடையோமென்று
களித்தமனத்தராய்க்கருதிவாழ்வீர்
நெய்யாறுவாடியநீலகண்டர்
நிமிர்புன்சடைநெற்றிக்கண்ணர்மேய
வையாறேயையாறேயென்பீராகி
லல்லறீர்ந்தமருலகமாளலாமே. கச)

இழவொன்றுதாமொருவர்க்கிட்டொன்றீயா
ரீன்றெடுத்ததாய்தந்தைபெண்டீர்மக்கள்
கழனங்கோவையாதல்கண்டுந்தேறார்
களித்தமனத்தராய்க்கருதிவாழ்வீ
ரழனம்மைநீக்குவிக்குமரையனுக்கு
மமருலகமாள்விக்குமம்மான்மேய

பழனம்பழனமேயென்பீராகிற்
பயின்றெழுந்தபழவினைநோய்பாற்றலாமே (௧௫)

ஊற்றுத்துறையொன்பதுண்ணின்றோ
ரொக்கவடைக்கும்போதுணரமாட்டீர்
மாற்றுத்துறைவழிகொண்டோடாமுன்ன
மாயமனைவாழ்க்கைமகிழ்ந்துவாழ்வீர்
வேற்றுத்தொழில்பூண்டார்புரங்கண்மூன்றும்
வெவ்வழல்வாய்வீழ்விக்கும்வேந்தன்மேய
சோற்றுத்துறைசோற்றுத்துறையென்பீராகிற்
றுயர்நீங்கித்தூநெறிக்கட்சேரலாமே (௧௬)

கலஞ்சுழிக்குங்கருங்கடல்சூழ்வையந்தன்னிற்
கள்ளக்கடலிலழுந்திவாளா
நலஞ்சுழியாவெழுநெஞ்சேயின்பம்வேண்டி
லலஞ்சுழிக்குமன்னாகந்தன்னான்மேய
வருமறையோடாறங்கமானார்கோயில்
வலஞ்சுழியேவலஞ்சுழியேயென்பீராகில்
வல்வினைகடீர்ந்துவானாளலாமே. (௧௭)

தண்டிகுண்டோதரன்பிங்கிருடி
சார்ந்தபுகழ்நந்திசங்குகன்னன்
பண்டையுலகம்படைத்தான்றானும்
பாரையளந்தான்பல்லாண்டிசைப்பத்
திண்டிவயிற்றுச்சிறுகட்பூதஞ்
சிலபாடச்செங்கண்விடையொன்றூர்வான்
கண்டியூர்கண்டியூரென்பீராகிற்
கடுகநும்வல்வினையைக்கழற்றலாமே (௧௮)

விடமூக்கப்பாம்பேபோற்சிந்திநெஞ்சே
வெள்ளேற்றான்றன்றமரைக்கண்டபோது
வடமூக்கமாமுனிவர்போலச்சென்று
மாதவத்தார்மனத்துளார்மழுவாட்செல்வர்
படமூக்கப்பாம்பணையிற்பள்ளியானும்
பங்கயத்துமேலயனும்பரவிக்காணாக்
குடமூக்கேகுடமூக்கேயென்பீராகிற்
கொடுவினைகடீர்ந்தரனைக்குறுகலாமே. (௧௯)

தண்காட்டாச்சந்தனமுந்தவளநீறுந்
தழையணுகுங்குறுங்கொன்றைமாலைசூடிக்
கண்காட்டாக்கருவரைபோலனையநாஞ்சிக்
கார்மயிலஞ்சாயலார்கலந்துகாண
வெண்காட்டாக்காடங்கிடமாநின்று
வெரிவீசியிரவாடுமிறைவர்மேய
வெண்காடேவெண்காடேயென்பீராகில்
வீடாதவல்வினையைவீட்டலாமே. (உ௰)

தந்தையார்தாயாருடன்பிறந்தார்
தாரமார்புத்திரரார்தாந்தாமாரே
வந்தவாறெங்ஙனேபோமாறேதோ
மாயமாமிதற்கேதுமகிழவேண்டா
சிந்தையீருமக்கொன்றுசொல்லக்கேண்மின்
றிகழ்மதியும்வாளரவுந்திளைக்குஞ்சென்னி
யெந்தையார்திருநாமநமச்சிவாய
வென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே. (உக)

## சுந்தரமூர்த்திநாயனார்.

### எ-ந் திரு. திருநாகைக்காரோணம் பண்-கொல்லிக்கௌவாணம்.

பத்தூர்புக்கிரந்துண்டுபலபதிகம்பாடிப்
பாவையரைக்கிறிபேசிப்படிறுபடித்திரிவீர்
செத்தார்தமெலும்பணிந்துசேவேறித்திரிவீர் [ர்
செல்வத்தைமறைத்துவைத்தீரெனக்கொருநாளிரங்கீ
முத்தாரமிலங்கிமிளிர்மணிவயிரக்கோவை
யவைபூணத்தந்தருளிமெய்க்கினிதாநாறுங்
கத்தூரிகமழ்சாந்தும்பணித்தருளவேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (உஉ)

### எ-ந் திரு. திருவாலங்காடு பண்-பழம்பஞ்சுரம்.

முத்தாமுத்திதரவல்லமுகிழ்மென்முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனேதேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர்போற்றும்பரமாபழையனூர்மேய
வத்தாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (உங)

### எ-ந் திரு திருவேகம்பம் பண் - தக்கேசி.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்துஞ்
சீலந்தான்பெரிதும்முடையானைச்சிந்திப்பாரவர்சிந்தையுளானை
யேலவார்குழலாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற [றே.
காலகாலனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவா

### எ-ந்திரு திருத்தொண்டத்தொகை பண்-கொல்லிக்கௌவாணம்.

கறைக்கண்டன்கழலடியேகாப்புக்கொண்டிருந்த
கணம்புல்லநம்பிக்குங்காரிக்குமடியே
னிறைக்கொண்டசிந்தையானெல்வேலிவென்ற
நின்றசீர்நெடுமாறனடியார்க்குமடியேன்
றுறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித்
தொன்மயிலைவாயிலானடியார்க்குமடியே
னறைக்கண்டவேனம்பிமுனையடுவார்க்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே (உரு)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

### அ-ந் திரு. திருவாசகம். குழைத்தபத்து.

அன்றேயென்றன்னாவியுமுடலுமுடைமையெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்கொண்டபோதேகொண்டிலையோ
வின்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண்முக்கணெம்மானே
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்நானோவிதற்குநாயகமே. (உசு)

### அ-ந் திரு. திருக்கோவையார்.

ஈசற்கியான்வைத்தவன்பினகன்றவன்வாங்கியவென்
பாசத்திற்காரென்றவன்றில்லையின்னொளிபோன்றவன்றோள்
பூசத்திருநீறெனவெளுத்தாங்கவன்பூங்கழல்யாம்
பேசத்திருவார்த்தையிற்பெருநீளம்பெருங்கண்களே. (உஎ)

### கூ-ந் திரு. திருச்சாட்டியக்குடி பண்-பஞ்சமம்.

செம்பொனேபவளக்குன்றமேநின்ற
திசைமுகன்மான்முதற்கூட்டத்
தன்பரானவர்கள்பருகுமாரமுதே
யத்தனேபித்தனேனுடைய
சம்புவேயணுவேதாணுவேசிவனே
சங்கராசாட்டியக்குடியார்க்

இன்பனேயெங்குமொழிவறநிறைந்தே
ழிருக்கையிலிருந்தவாறியம்பே. (உஅ)

## கூ-ந் திரு. திருப்பல்லாண்டு.கோயில் பண் - பஞ்சமம்.

நாதையைத்தாளறவீசியசண்டிக்குமண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும்போனகமுமருளிச்
சோதிமணிமுடித்தாமமுநாமமுந்தொண்டர்க்குநாயகமும்
பாதகத்துக்குப்பரிசுவைத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (உகூ)

## க0-ந் திரு. திருமந்திரம்

பொல்லாப்புலாலை நுகரும்புலையரை
யெல்லாருங்காண வியமன் றன்றூதுவர்
செல்லாகப்பற்றியதீவாய்நரகத்தின்
மல்லாக்கத்தள்ளிமறித்துவைப்பாரே. (ஙம)

## கக-ந் திரு. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

வருந்தேனிறந்தும்பிறந்துமயக்கும்புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற்புகுகின்றிலேன் புகழ்மாமருதிற்
பெருந்தேன்முகந்துகொண்டுண்டுபிறிதொன்றிலாசையின்றி
யிருந்தேனினிச்சென்றிரவேனொருவரையாதொன்றுமே. (ஙக)

## கஉ-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

அண்ணலேயெனையாண்டுகொண்டருளியவமுதே
விண்ணிலேமறைந்தருள்புரிவேதநாயகனே
கண்ணினூற்றிருக்கயிலையிலிருந்தநின்கோல
நண்ணிநான்றொழநயந்தருள்புரியெனப்பணிந்தார். (ஙஉ)

திருச்சிற்றம்பலம்.

## கலாசாலை வகுப்பு—க.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

### க-ந் திரு. திருநள்ளாறும் திருவாலவாயும் வினவுரை பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

பாடகமெல்லடிப்பாவையோடும்படுபிணக்காடிடம்பற்றிநின்று
நாடகமாடுநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
சூடகமுன்கைமடந்தைமார்கடுணைவரொடுந்தொழுதேத்திவாழ்த்த
வாடகமாடநெருங்குகூடலாலவாயின்கணமர்ந்தவாறே (க)

### க-ந் திரு. திருப்பாம்புரம் பண்-தக்கராகம்.

சீரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரிசெய்தசெல்வர்
வாரணிவனமுலைமங்கையோர்பங்கர்மான்மறியேந்தியமைந்தர்
காரணிமணிதிகழ்மிடறுடையண்ணல்கண்ணுதல்விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தருநான்மறையாளர்பாம்புரநன்னகராரே. (உ)

### க-ந் திரு. திருநீலகண்டப்பதிகம் பண் - வியாழக்குறிஞ்சி.

அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீ
ருய்வினைநாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோஞ்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம் (ங)

### உ-ந்திரு. திருநெல்வாயிலரத்துறை பண்-பியந்தைக்காந்தாரம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லாற்சென்றுகைகூடுவதன்றாற்
கந்தமாமலருந்திக்கடும்புனநிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே (ச)

### உ-ந்திரு. திருமறைக்காடு பண்-பியந்தைக்காந்தாரம்.

பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்முத்தங்
கங்குலாரிருள்போழுங்கலிமறைக்காடமர்ந்தார்தாந்
திங்கள்சூடினரேனுந்திரிபுரமெரித்தனரேனு
மெங்குமெங்கள்பிரானார்புகழலதிகழ்பழியிலரே. (ரு)

உ-ந் திரு. திருப்புகலூர் பண் - பியந்தைக்காந்தாரம்.

பட்டம்பானிறமதியம்படர்சடைச்சுடர்விடுபாணி
நட்டநள்ளிருளாடுநாதனூர்நவின்றுறைகோயில்
புட்டன்பேடையொடாடும்பூம்புகலூர்த்தொண்டர்போற்றி
வட்டஞ்சூழ்ந்தடிபரவும்வர்த்தமானீச்சரத்தாரே. (சு)

உ- ந் திரு. திருவலஞ்சுழி பண் - நட்டராகம்.

என்னபுண்ணியஞ்செய்தனைநெஞ்சமேயிருங்கடல்வையத்து
முன்னைநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கண்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனைவாயாரப்
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனாலே. (எ)

ங-ந் திரு திருவேகம்பம் திருவியமகம்.

பாயுமால்விடைமேலொருபாகனேபாவைதன்னுருமேலொருபாக
தூயவானவர்வேதத்துவனியேசோதிமாலெரிவேதத்துவனியே[னே
யாயுநன்பொருணுண்பொருளாதியேயாயநீழல்வரும்பொருளாதியே
காயவின்மதன்பட்டதுகம்பமேகண்ணுதற்பரமற்கிடங்கம்பமே. ()

# திருநாவுக்கரசுநாயனார்.

ச-ந் திரு. திருவாரூர் திருவாதிரைப்பதிகம் பண் - குறிஞ்சி.

முத்துவிதானமணிப்பொற்கவரிமுறையாலே
பத்தர்களோடுபாவையர்சூழப்பலிப்பின்னே
வித்தகக்கோலவெண்டலைமாலைவிரதிக
ளத்தனாரூராதிரைநாளாலதுவண்ணம். (க)

ச-ந் திரு. தனித்திருநேரிசை.

காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாநிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினோமே. (ம)

ச-ந் திரு. திருக்கழுமலம் திருவிருத்தம்.

பார்கொண்டுமூடிக்கடல்கொண்டஞான்றுநின்பாதமெல்லாம்
நாலஞ்சுபுள்ளினமேந்தினவென்பர்களிர்மதியங்
கால்கொண்டவண்கைச்சடைவிரித்தாடுங்கழுமலவர்க்
கானன்றிமற்றுமுண்டோவந்தணாழியகலிடமே. (கக)

ரு-ந் திரு திருக்குறுந்தொகை.

அலங்கல்சேர்சடையாதிபுராணனை
விலங்கல்மெல்லியல்பாகம்விருப்பனைக்
கலங்கள்சேர்கடனாகைக்காரோணனை
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (கஉ)

சு-ந் திரு. தனித்திருத்தாண்டகம்.

அப்பனீயம்மைநீயையனுநீ
யன்புடையமாமனும்மாமியுநீ
யொப்புடையமாதருமொண்பொருளுநீ
யொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ
துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீ
துணையாயென்னெஞ்சந்துறப்பிப்பாய்நீ
யிப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீ
யிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே. (கங)

வெம்பவருகிற்பதன்றுகூற்றநம்மேல்
வெய்யவினைப்பகையும்பையவுநையு
மெம்பரிவுதீர்ந்தோமிடுக்கணில்லோ
மெங்கெழிலென்ஞாயிறெளியோமல்லோ
மம்பவளச்செஞ்சடைமேலாறுசூடி
யனலாடியானஞ்சுமாட்டுகந்த
செம்பவளவண்ணர்செங்குன்றவண்ணர்
செவ்வானவண்ணரென்சிந்தையாரே. (கச)

ஆட்டுவித்தாலாரொருவராடாதாரே
யடக்குவித்தாலாரொருவரடங்காதாரே
யோட்டுவித்தாலாரொருவரோடாதாரே
யுருகுவித்தாலாரொருவருருகாதாரே
பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரே
பணிவித்தாலாரொருவர்பணியாதாரே
காட்டுவித்தாலாரொருவர்காணாதாரே
காண்பாராரகண்ணுதலாய்காட்டாக்காலே (கரு)

நற்பதத்தார்நற்பதமேஞானமூர்த்தீ
நலஞ்சுடரேநால்வேதத்தப்பானின்ற

சொற்பதத்தார்சொற்பதமுங்கடந்துநின்ற
சொலற்கரியசூழலாயிதுவுன்றன்மை
நிற்பதொத்துநிலையிலாநெஞ்சந்தன்னு
ணிலாவாதபுலாலுடம்பேபுகுந்துநின்ற
கற்பகமேயானுன்னைவிடுவேனல்லேன்
கனகமாமணிநிறத்தெங்கடவுளானே. (க௬)

திருக்கோயிலில்லாததிருவிலூருந்
திருவெண்ணீறணியாததிருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்
பாங்கினொடுபலதளிகளில்லாவூரும்
விருப்போடுவெண்சங்கமூதாவூரும்
விதானமும்வெண்கொடியுமில்லாவூரு
மருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூரு
மவையெல்லாமூரல்லவடவிகாடே. (க௭)

திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற்
றீவண்ணர்திறமொருகாற்பேசாராகி
லொருகாலுந்திருக்கோயில்சூழாராகி
லுண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணாராகி
லருநோய்கள்கெடவெண்ணீறணியாராகி
லளியற்றார்பிறந்தவாறேதோவென்னிற்
பெருநோய்கள்மிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே. (க௮)

நின்னாவார்பிறரின்றிநீயேயானாய்
நினைப்பார்கண்மனத்துக்கோர்வித்துமானாய்
மன்னானாய்மன்னவர்க்கோரமுதமானாய்
மறைநான்குமானாயாறங்கமானாய்
பொன்னானாய்மணியானாய்போகமானாய்
பூமிமேற்புகழ்தக்கபொருளேயுன்னை
யென்னானாயென்னானாயென்னினல்லா
லேழையேனென்சொல்லியேத்துகேனே. (க௯)

அத்தாவுன்னடியேனையன்பாலார்த்தா
யருணோக்கிற்றீர்த்தநீராட்டிக்கொண்டா
யெத்தனையுமரியைநீயெளியையானா
யெனையாண்டுகொண்டிரங்கியேன்றுகொண்டாய்

பித்தனேன்பேதையேன்பேயேனாயேன்
பிழைத்தனகளைத்தனையும்பொறுத்தாயன்றே
யித்தனையுமெம்பரமோவையவையோ
வெம்பெருமான் றிருக்கருணையிருந்தவாறே. (உ௰)

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லே
குற்றமேபெரிதுடையேன்கோலமாய [ன்
நலம்பொல்லேனான்பொல்லேன் ஞானியல்லே
னல்லாரோடிசைந்திலேனடுவேநின்ற
விலங்கல்லேன் விலங்கலாதொழிந்தேனல்லேன்
வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லே
னிலம்பொல்லேனிரப்பதல்லாலீயமாட்டே
னென்செய்வான் றோன்றினேனேழையேனே. (உக)

சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து
தரணியொடுவானாளத்தருவரேனு
மங்குவாரவர்செல்வமதிப்போமல்லோ
மாதேவர்க்கேகாந்தரல்லராகி
லங்கமெலாங்குறைந்தழுகுதொழுநோயரா
யாவுரித்துத்தின் றுழலும்புலையரேனுங்
கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகி
லவர்கண்டீர்நாம்வணங்குங்கடவுளாரே. (உஉ)

## சுந்தரமூர்த்திநாயனார்.

எ-ந் திரு. திருநின்றியூர் பண்-தக்கேசி.

திருவும்வண்மையுந்திண்டிறலரசுஞ்
சிலந்தியார்செய்தசெய்பணிகண்டு
மருவுகோச்செங்கணான் றனக்களித்த
வார்த்தைகேட்டுநின்மலரடியடைந்தேன்
பெருகுபொன்னிவந்துந்துபன்மணியைப்
பிள்ளைப்பல்கணம்பண்ணையுணண்ணித்
தெருவுந்தெற்றியுமுற்றமும்பற்றித்
தெருட்டுந்தென் றிருநின்றியூரானே (ந)

எ-ந் திரு திருநள்ளாறு பண் - தக்கேசி.

பூவில்வாசத்தைப்பொன்னினைமணியைப்
புவியைக்காற்றினைப்புனலனல்வெளியைச்
சேவின்மேல்வருஞ்செல்வனைச்சிவனைத்
தேவதேவனைத்தித்திக்குந்தேனைக்
காவியங்கண்ணிபங்கனைக்கங்கைச்
சடையனைக்காமரத்திசைபாட
நாவிலூறுநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே. (உச)

எ-ந் திரு திருத்தொண்டத்தொகைபண்-கொல்லிக்கௌவாணம்.

கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான்
காடவர்கோன்கழற்சிங்கனடியார்க்குமடியேன்
மடல்சூழ்ந்ததார்நம்பியிடங்கழிக்குந்தஞ்சை
மன்னவனாஞ்செருத்துணைதன்னடியார்க்குமடியேன்
புடைசூழ்ந்தபுலியதண்மேலரவாடவாடி
பொன்னடிக்கேமனம்வைத்தபுகழ்த்துணைக்குமடியே
னடல்சூழ்ந்தவேனம்பிகோட்புலிக்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (உரு)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

அ-ந் திரு. திருவாசகம், திருவேசறவு.

நானேயோதவஞ்செய்தேன்சிவாயநமவெனப்பெற்றேன்
றேனாயின்னமுதமுமாய்த்தித்திக்குஞ்சிவபெருமான்
றானேவந்தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தா
னூனாருமுயிர்வாழ்க்கையொறுத்தன்றேவெறுத்திடவே. (உசு)

அ-ந் திரு. திருக்கோவையார்.

ஓராகமிரண்டெழிலாயொளிர்வோன்றில்லையொண்ணுதலங்
கராகம்பயின்றமிழ்தம்பொதிந்தீர்ஞ்சுணங்காடகத்தின்
பராகஞ்சிதர்ந்தபயோதரமிப்பரிசேபணைத்த
வராகங்கண்டால்வள்ளலேயில்லையேயமரெண்ணுவதே. (உஎ)

### கூ-ந் திரு. தஞ்சைஇராசராசேச்சரம் பண்-பஞ்சமம்.

உலகெலாந்தொழவந்தெழுகதிர்ப்பரிதி
யொன்றுநூறாயிரகோடி
யலகெலாம்பொதிந்ததிருவுடம்பச்சோ
வங்ஙனேவழகிதோவரணம்
பலகுலாம்படைசெய்நெடுநிலைமாடம்
பருவரைஞாங்கர்வெண்டிங்க
ளிலைகுலாம்பதணத்திஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௨௮)

### கூ-ந் திரு திருப்பல்லாண்டு, கோயில் பண் - பஞ்சமம்.

குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங்குழாம்பெருகி
விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மிமிகுதிருவாரூரின்
மழவிடையாற்குவழிவழியாளாய்மணஞ்செய்குடிப்பிறந்த
பழவடியாரொடுங்கூடியெம்மானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௨௯)

### ௧௦-ந் திரு. திருமந்திரம்.

சரிதாதிநான்குந்தருஞானநான்கும்
விரிவானவேதாந்தசித்தாந்தமாறும்
பொருளானதுநந்திபொன்னகர்போந்து
மருளாகுமாந்தர்வணங்கவைத்தானே. (௩௰)

### ௧௧-ந் திரு சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை.

இயலிசைநாடகமாயெழுவேலைகளாய்வழுவாப்
புயலியல்விண்ணொடுமண்முழுதாய்ப்பொழுதாகிநின்ற
மயிலியன்மாமறைக்காடர்வெண்காடர்வண்டில்லைமல்கு
கயலியல்கண்ணிபங்காரன்பர்சித்தத்தடங்குவரே. (௩௧)

### ௧௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

வாசத்திருமஞ்சனம்பள்ளித்தாமஞ்சாந்தமணித்தூபந்
தேசிற்பெருகுஞ்செழுந்தீபமுதலாயினவுந்திருவமுது
மீசர்க்கேற்றபரிசினாலருச்சித்தருளவெந்நாளும்
பூசைக்கமர்ந்தபெருங்கூத்தர்பொற்பார்சிலம்பினொலியளித்தார். ()

திருச்சிற்றம்பலம்.

# கலாசாலை வகுப்பு—உ.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

### க-ந் திரு. திருக்கழுமலம், திருத்தாளச்சதி, பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால்வந்தெப்பார்பயின்றுநின்றவுப்பரப்
பாலேசேர்வாயேனோர்கான்பயில்கணமுனிவர்களுஞ்
சிந்தித்தேவந்திப்பச்சிலம்பின்மங்கைதன்னொடுஞ்
சேர்வார்நாணாணீள்கயிலைத்திகழ்தருபரிசதெலாஞ்
சந்தித்தேயிந்தப்பார்சனங்கணின்றுதங்கணாற்
றாமேகாணாவாழ்வாரத்தகவுசெய்தவனதிடங்
கந்தத்தாலெண்டிக்குங்கமழ்ந்திலங்குசந்தனக்
காடார்பூவார்சீர்மேவுங்கழுமலவளநகரே. (க

### க-ந் திரு. திருத்தருமபுரம் பண்-யாழ்முரி.

மாதர்மடப்பிடியு-மட-வன்னமுமன்னதோர்
நடையுடைம்மலைமகடுணையெனமகிழ்வர்
பூதவினப்படைநின்-றிசை-பாடவுமாடுவ
ரவர்படர்சடைநெடு-முடியதோர்புனலர்
வேதமொடேழிசைபா-டுவ-ராழ்கடல்வெண்டிரை
யிரைந்நுரைகரைபொருது-விம்மிநின்றயலே
தாதவிழ்புன்னைதயங்-கும-லர்ச்சிறைவண்டறை
யெழில்பொழில்குயில்பயில்-தருமபுரம்பதியே. (உ

### உ-ந் திரு. திருக்கேதாரம் பண்-செவ்வழி.

தொண்டரஞ்சுங்களிறுமடக்கிச்சுரும்பார்மல
ரிண்டைகட்டிவழிபாடுசெய்யுமிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவ்வரி
கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே. (ரு

### க-ந் திரு. திருவீழிமிழலை திருவிராகம் பண்-நட்டபாடை.

சினமலிகரியுரிசெய்தசிவனுறைதருதிருமிழலையைமிகு
தனமனர்சிரபுரநகரிறைதமிழ்விரகனதுரையொருபது

மனமகிழ்வொடுபயில்பவரெழின்மலர்மகள்கலைமகள்சயமக
ளினமலிபுகழ்மகளிசைதரவிருநிலனிடையினிதமர்வரே. (௪)

### ௩-ந் திரு. திருப்பனந்தாள் பண்-பஞ்சமம்.

கண்பொலிநெற்றியினான் றிகழ்கையிலோர்வெண்மழுவான்
பெண்புணர்கூறுடையான்மிகுநீடுடைமால்விடையான்
விண்பொலிமாமதிசேர்தருசெஞ்சடைவேதியனூர்
தண்பொழில்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௫)

### ௩-ந் திரு. திருநெல்வேலி பண்-சாதாரி.

மருந்தவைமந்திரமறுமைநன்னெறியவைமற்றுமெல்லா
மருந்துயர்கெடுமவர்நாமமேசிந்தைசெய்நன்னெஞ்சமே [பூஞ்
பொருந்துதண்புறவினிற்கொன்றைபொன்சொரிதரத்துன்றுபைம்
செருந்திசெம்பொன்மலர்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே (௬)

### ௩-ந் திரு. திருவாலவாய் திருஇயமகம்.

ஆலநீழலுகந்ததிருக்கையேயானபாடலுகந்ததிருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்கனே
கோலநீறணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
யாலநஞ்சமுதுண்டகளத்தனேயாலவாயுறையண்டர்களத்தனே. ()

### ௩-ந் திரு திருக்கோணமாமலை பண்-புறநீர்மை.

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்புநிமலர்நீறணிதிருமேனி [ர்
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர்கொடியணிவிடைய
கரைகெழுசந்துங்காரகிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோதநித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே. ()

## திருநாவுக்கரசுநாயனார்.

### ௪-ந் திரு. திருவாரூர்ப்பழமொழி பண்-காந்தாரம்.

மெய்யெலாம்வெண்ணீறுசண்ணித்தமேனியான்றாடொழாதே
யுய்யலாமென்றெண்ணியுறிதூக்கியுழிதந்தென்னுள்ளம்விட்டுக்
கொய்புலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுமாரூரரைக்
கையினாற்றொழாதொழிந்துகனியிருக்கக்காய்கவர்ந்தகள்வனேனே.

### ௪-ந் திரு. திருக்குறுக்கை திருநேரிசை.

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாவரமணலாற்கூப்பி
யழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௧௧)

### ௪-ந் திரு. கோயில் திருவிருத்தம்.

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்றதில்லைசிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநிற்க
நெஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான் [னே
கைஞ்ஞின்றவாடல்கண்டாற்பினைக்கண்கொண்டுகாண்பதென்

### ௫-ந் திரு திருச்சிராப்பள்ளி திருக்குறுந்தொகை.

தாயுமாயெனக்கேதலைகண்ணுமாய்ப்
பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய
நாயனாரெனநம்வினைநாசமே. (௧௨)

### ௬-ந் திரு. திருப்புகலூர் திருத்தாண்டகம்.

எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனோ
வெம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லாற்
கண்ணிலேன்மற்றோர்களைகணில்லேன்
கழலடியேகைதொழுதுகாணினல்லா
லொண்ணுளேயொன்பதுவாயில்வைத்தா
யொக்கவடைக்கும்போதுணரமாட்டேன்
புண்ணியனேயுன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௪)

அங்கமேபூண்டாயனலாடினா
யாதிரையாயானிழலாயானேறூர்ந்தாய்
பங்கமொன்றில்லாதபடர்சடையினாய்
பாம்பொடுதிங்கள்பகைதீர்த்தாண்டாய்
சங்கையொன்றின்றியேதேவர்வேண்டச்
சமுத்திரத்துநஞ்சுண்டுசாவாமூவாச்
சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன்
திருப்புகலூர்மேவியதேவதேவே. (௧௫)

பையரவக்கச்சையாய்பால்வெண்ணீற்ருய்
பளிக்குக்குழையிஞய்பண்ணுரின்சொன்
மைவிரவுகண்ணுளைப்பாகங்கொண்டாய்
மான்மறிக்கையேந்திஞய்வஞ்சக்கள்வ
ரைவரையுமென்மேற்றரவாறுத்தா
யவர்வேண்டுங்காரியமிங்காவதில்லைப்
பொய்யுரையாதுன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௬)

தெருளாதார்மூவெயிலுந்தீயில்வேவச்
சிலைவளைத்துச்செங்கணேயாற்செற்றதேவே
மருளாதார்தம்மனத்தில்வாட்டந்தீர்ப்பாய்
மருந்தாய்ப்பிணிதீர்ப்பாய்வானோர்க்கென்று
மருளாகியாதியாய்வேதமாகி
யலர்மேலானீர்மேலானுய்ந்துங்காணுப்
பொருளாவாயுன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௭)

நீரேறுசெஞ்சடைமேனிலாவெண்டிங்க
ணீங்காமல்வைத்துகந்தநீதியானே
பாரேறுபடுதலையிற்பலிகொள்வானே
பண்டனங்கைப்பார்த்தானேபாவநாசா
காரேறுமுகிலனையகண்டத்தானே
கருங்கைக்களிற்றுரிவைகதறப்போர்த்த
போரேறேயுன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௮)

விரிசடையாய்வேதியனேவேதகீதா
விரிபொழில்சூழ்வெண்காட்டாய்மீயச்சூராய்
திரிபுரங்களெரிசெய்ததேவதேவே
திருவாரூர்த்திருமூலட்டானமேயாய்
மருவினியார்மனத்துளாய்மாகாளத்தாய்
வலஞ்சுழியாய்மாமறைக்காட்டெந்தாயென்றும்
புரிசடையாயுன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧௯)

தேவார்ந்ததேவனைத்தேவரெல்லாந்
திருமுடிமேலலரிட்டுத்தேடிநின்று
நாவார்ந்தமறைபாடிநட்டமாடி
நான்முகனுமிந்திரனும்மகிழ்ந்துபோற்றக்
காவார்ந்தபொழிற்சோலைக்கானப்பேற்றாய்
கழுக்குன்றத்துச்சியாய்கடவுளேநின்
பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௨௰)

நெய்யாடிநின்மலனேநீலகண்டா
நிறைவுடையாய்மறைவல்லாய்நீதியானே
மையாடுகண்மடவாள்பாகத்தானே
மான்றோலுடையாய்மகிழ்ந்துநின்றாய்
கொய்யாடுகூவிளங்கொன்றைமாலை
கொண்டடியேனிட்டுக்கூறிநின்று
பொய்யாதசேவடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௨௧)

துன்னஞ்சேர்கோவணத்தாய்தூயநீற்றாய்
துதைந்திலங்குவெண்மழுவாள்கையிலேந்தி
தன்னனையுந்தண்மதியும்பாம்பும்நீருஞ்
சடைமுடிமேல்வைத்துகந்ததன்மையானே
யன்னநடைமடவாள்பாகத்தானே
யக்காரம்பூண்டானேயாதியானே
பொன்னங்கழலடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௨௨)

ஒருவனையுமல்லாதுணராதுள்ள
முணர்ச்சித்தடுமாற்றத்துள்ளேநின்ற
விருவரையுமூவரையுமென்மேலேவி
யில்லாததரவறுத்தாய்க்கில்லேனேலக்
ருவரைசூழ்கானலிலங்கைவேந்தன்
கடுந்தேர்மீதோடாமைக்காலாற்செற்ற
பொருவரையாயுன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௨௩)

## சுந்தரமூர்த்திநாயனார்.

எ-ந் திரு. திருவாரூர் பண்-செந்துருத்தி.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டா(
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிக
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே. (உச)

ா-ந்திரு. திருத்தொண்டத்தொகைபண்-கொல்லிக்கௌவாணம்.

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்
பரமனையேபாடுவாரடியார்க்குமடியேன்
சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன்
திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன்
முப்போதுந்திருமேனிதீண்டுவார்க்கடியேன்
முழுநீறுபூசியமுனிவர்க்குமடியே
னப்பாலுமடிச்சார்ந்தவடியார்க்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (உரு)

மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல்
வரிவளையாண்மானிக்குநேசனுக்குமடியேன்
றென்னவனாயுலகாண்டசெங்கணார்க்கடியேன்
திருநீலகண்டத்துப்பாணனார்க்கடியே
னென்னவனாமரனடியேயடைந்திட்டசடைய
னிசைஞானிகாதலன்றிருநாவலூர்க்கோ
னன்னவனாமாரூரனடிமைகேட்டுவப்பா
ராரூரிலம்மானுக்கன்பராவாரே. (உசு)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

அ-ந் திரு. திருவாசகம், அச்சோப்பதிகம்.

முத்திநெறியறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணம்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (உ‹

அ-ந் திரு. திருக்கோவையார்.

காரணிகற்பகங்கற்றவர்நற்றுணைபாணரொக்க
சீரணிசிந்தாமணியணிதில்லைச்சிவனடிக்குத்
தாரணிகொன்றையன்றக்கோர்தஞ்சங்கநிதிவிதிசே
ருருணியுற்றவர்க்கூரன்மற்றியாவர்க்குமூதியமே. (உஅ)

### ௯-ந் திரு. திருவிசைப்பா, திருவாரூர் பண் - பஞ்சமம்.

பத்தியாயுணர்வோரருளைவாய்மடுத்துப்
பருகுதோறமுதமொத்தவர்க்கே
தித்தியாவிருக்குந்தேவர்காளிவர்தந்
திருவுருவிருந்தவாபாரீர்
சத்தியாய்ச்சிவமாயுலகெலாம்படைத்த
தனிமுழுமுதலுமாயதற்கோர்
வித்துமாயாரூராதியாய்வீதி
விடங்கராய்நடங்குலாவினரே.

### ௯-ந் திரு. திருப்பல்லாண்டு, கோயில் பண் - பஞ்சமம்.

ஆரார்வந்தாரமரர்குழாத்திலணியுடையாதிரைநாள்
நாராயணனொடுநான்முகனங்கியிரவியுமிந்திரனுந்
தேரார்வீதியிற்றேவர்குழாங்கடிசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ்பாடியுமாடியும்பல்லாண்டுகூறுதுமே (௫௰)

### க௦-ந் திரு. திருமந்திரம்.

மாலைவிளக்குமதியமும்ஞாயிறும்
சாலவிளக்குந்தனிச்சுடரண்ணலுள்
ஞானம்விளக்கியநாதனென்னுள்புகுந்
தூனைவிளக்கியுடனிருந்தானே. (௫௧)

### கக-ந் திரு. சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை.

அங்கைமறித்தவராலவியுண்ணுமவ்வானவர்கள்
தங்கைமறித்தறியார்தொழுதேநிற்பர்தாழ்சடையின்
கங்கைமறித்தணவப்பணமாசுணக்கங்கணத்தின்
செங்கைமறித்திரவிற்சிவனாடுந்திருநட்டமே. (௫௨)

### க௨-ந் திரு. திருத்தொண்டர் பெரியபுராணம்.

மறவாமையானமைத்தமனக்கோயிலுள்ளிருத்தி
உறவாதிதனையுணருமொளிவிளக்குச்சுடரேற்றி
இறவாதவானந்தமெனுந்திருமஞ்சனமாட்டி
அறவாணர்க்கன்பென்னுமமுதமைத்தர்ச்சனைசெய்வார். (௫௩)

திருச்சிற்றம்பலம்